# தென்மொழி

T. 5847

## வீறுற்று எழுவீரே!

நரிமை மனங் கொண்டவர் பால்
நயந்து, நயன் பேசி
உரிமைதரக் காலமெலாம்
உளங்கசிந்து நின்றேம்;
உரிமைத்தரக் கால மெல்லாம்
உளங்கசிந்து நின்றும்,
சரிமைநிகர் அதிகாரம்
சமவுடைமை காண,
ஒருமை மனங் கொண்டிலரே!
ஊமையரா நாமும்?

ஊமையரா நாமும்? இங்கோர்
உணர்வுமற்று போனேம்?
ஆமையரா நாமும்? நல்ல
ஆண்மையற்று போனேம்?
ஆமையராய் நாமும் நல்ல
ஆண்மையற்றுப் போனல்,
ஏமமெனக் காத்துவந்த
இனமழிந்து போக,
தீமைமேலும் மேலும்வந்தே
திசையழிந்து போவோம்!

திசையழிந்து போய்விடுவோம்;
திருவழிந்து போவோம்!
வசைமலிந்து பெருகிவிடும்;
வழிமுறையும் ஏசும்!
வசைமலிந்து பெருகிவிட
வழிமுறையும் ஏச,
அசைவற்று நாமிருப்ப(து)?
அடடா, ஓ! தமிழீர்!
விசையெழுந்து பாய்ந்ததுபோல்
வீறுற்றெழு வீரே!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

26044

வடி : 25
ல : 6
விலை:
உருபா: 2-00

சிறப்பு மடல்!

# கற்றாரைக் கற்றாரே காமுறுவர்!

## அறிஞர் அப்பாத்துரையார் குடும்பத்திற்குப் பேரா. சாலையாரின் கண்ணீர்க் கொடை!

தோழர் அவர்களுக்கு,

அன்புடன்... 'தென்மொழி' (பிப்ரவரி, 1990) சுவடி 25 ஓலை 5-இல் அப்பாத்துரையார் குடும்பத்துக்கு உதவுமாறு தமிழ் அன்பர்களைக் கோரி நீங்கள் எழுதியிருந்த உருக்கமான கூடிதத்தைப் பார்த்தேன். கடிதத்தை முழுவதும் படிக்க முடியவில்லை; இடையிலேயே கண்களில் நீர்தேங்கித் திரையிட்டுவிட்டது. அம்மாவுக்கு உரு. 100,00 அனுப்பிய பிறகே கடிதத்தைத் தொடர்ந்து படித்தேன்.

நமது கருணாநிதியார் அவர்கள் நடந்து கொண்ட முறை எனக்கு வியப்பளிக்கவில்லை. அவருடைய நெஞ்சம் வெற்று விளம்பரக் கல்நெஞ்சம் என்பதை முன்பும் சில நிகழ்ச்சிகள் வாயிலாக அறிந்துள்ளேன்: இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு முதல் துணையாக இருந்த ஈழத்தடிகள் இறுதி நாள்களில் வறுமையில் வாடினார். அப்போது, கருணாநிதி தமிழக முதல்வராக இருந்தார். ஈழத்தடிகள் உதவிகோரி இவரை அணுகியபோது, ''நீர் அண்ணாவைக் குறைகூறி விட்டீர்; உமக்கு உதவ முடியாது'' என்று மறுத்துவிட்டாராம், கருணாநிதி! அதைச் கேள்விப்பட்டு, அன்று முதல் ஈழத்தடிகள் காலமாகும் வரை, மாதாமாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை அவருக்கு அனுப்பி வந்தேன்.

நம் போன்றவர்கள் உயிரோடு இருக்கும்வரை எந்தத் தமிழறிஞரின் குடும்பமும் வறுமையில் சாகாமல் பார்த்துக் கொள்ளுவோம். அம்மையாருக்கு ஒவ்வொரு மாதமும் உரு. 100/-அனுப்பி வருவதென்று முடிவு செய்திருக்கிறோம்.

கருணாநிதி அவர்களைத் 'தமிழினத் தலைவர்' என்றும் 'தமிழாய்ந்த தமிழன்' என்றும் சிலபேர் சொல்லித் திரிகிறார்கள். அதிலே எனக்குப் பொறாமையோ வருத்தமோ இல்லை. கருணாநிதி அவர்கள், குறைந்த அளவு ஒரு கலைஞராகவாவது இருப்பார் என்று எதிர்பார்த்தேன். அதுவும் இல்லையே என்பதுதான் என் வருத்தம். ஒரு தமிழன் கலைஞனாக இருந்தால், ஒரு தமிழறிஞனின் குடும்பம் கண்ணீர்க் கடலில் தத்தளிப்பதைக் கண்டு அவன் வாளா இருக்கவே மாட்டான்; அப்படியிருக்க அவனால் முடியாது! இவர் என்ன கலைஞரோ?

கருணாநிதிகள் எப்படியோ போகட்டும்; அவர்களின் அரசுகள் தமிழ் உணர்வு அற்ற சல்லடைத் தட்டுகளாகவே இருந்து போகட்டும். நாம் தமிழ் உணர்ச்சி உள்ள மாந்தர்களாக வாழ்வோம். நம்முடைய கால்வழி வற்றாது. ஏனெனில், இ'து அன்பு என்னும் அடையாத ஊற்றில் பிறந்து வளர்வது.

அப்பாத்துரையாரின் குடும்பத்திற்கு உதவத் துடித்த பெருஞ்சித்திரப் பேருள்ளத்தைக் குறித்துப் பெருமிதம் அடைகின்றேன்.

பேராசிரியர். சாலை இளந்திரையன்

சென்னை-'86



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[ திருவணம் தி. பி. 1990 (1959) ]




தென்மொழி

மொழி—இனம்—நாடு.


**நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.


பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி : 847829)

சுவடி 25] உ0உக கும்பம்' (பிப்-மார். 90') [ஓலை: 6


# தமிழறிஞர்களின் தமிழ்ப்பணி! - 3



இனி, புத்திலக்கியங்கள் என்னும் பெயரில், புதுப்பா என்னும் வகை தொகையில்லாத ஒரு சொல்லுரை வடிவத்திலும், மரபுப்பா என்னும் வகையில் அழுத்தமும், கட்டுக் கோப்பும், சொல் சிறப்பும், கருத்துச் செறிவும் இல்லாத பா வடிவங்களிலும், பாடல் தொகுப்புகள், பாவியங்கள் முதலிய நூல்கள் பொல பொலவென அச்சிடப்பெற்றுப் பொத்தக விற்பனையகங்களில் வந்து குவிகின்றன. இவற்றில் வெறும் சொல்லடைப்புகள், மேலோட்டமான வறிய கதையமைப்புகள், எவ்வகை உணர்வும், மகிழ்வும் தராத தவிட்டுக் குவியல் போலும் வண்ணிப்புகள், அடைவின்றித் திக்காலுக் கொன்றாக அச்சிட்டுச் சிதறு தேங்காய் போலும் வரிகள் தவிர இலக்கியத்திற்கான அச்சு அடையாளம் எதுவுமே இருப்பதில்லை.

இவற்றுள் உள்ள இன்னொரு பெரு வியப்பான செய்தி என்னவென்றால், இவற்றுக்கு மதிப்புரை, அணிந்துரை, பாராட்டுரை,

திறனாய்வுரை என்னும் அணி, ஆடம்பர விளம்பரப் படைப்புகள் வேறு, பற்பல படித்த பேராசிரியர்களிடமும் மதிப்பாளர்களிடமும் இருந்து பெற்றுப் பக்கம் பக்கமாய் வரைந்து தள்ளியிருப்பது தான்! இவற்றுள் கூறப் பெற்றிருக்கும் வீணுரைகளில் மருந்துக்கு ஒரு வரியில்கூட, அந் நூல்களில் உள்ள பிழைகளில் அல்லது வெற்றுரைகளில் ஒன்றைக்கூட எடுத்துக் கூறிவிடாத விரகையும், பிழைபோற்றும் பெருந்தன்மையையும் பரக்கக் காணலாம். நூலாசிரியர்களும் கெட்டிக்காரத்தனமாய் அத்தகைய தரகு எழுத்தாளர்களையும், தன்னறிவு விளம்பரக்காரர்களையுமே பார்த்துத் தேடிப் பிடித்துத்தான் தங்கள் நூல்களுக்கான மதிப்புரை, அணிந்துரை வேட்கைகளையும், வெப்ப உணர்வுகளையும் தணிவித்தும் குளிர்வித்தும் கொள்கிறார்கள்.

மற்றபடி, பாடல் தொகுதிகள் அல்லது பாவியங்கள் என்றவாறு வெளிவரும் நூல்களில்,பாட்டு நெயவு தவிர நூல் சிறப்போ, அணியிழைகள் சிறப்போ அறவே இருப்பதில்லை. தடிநூல்களும், சணப்பை நூல்களும், தேங்காய் நாரும், புளிச்சை நாரும் கொண்டு மிடைந்தன போல் ஒரு வல்லாடைத் தோற்றம் காட்டி வயங்குகின்றனவே தவிர, அவை இலக்கியம் என்னும் தமிழ்த் தெய்வக் கோபுரத் தன்மைக்குத் துளியளவானும் பொருந்துவனவே அல்ல. ஒரு நூல் முழுதும் இறைக்கப் பெற்ற சொற் கூட்டாஞ் சோற்றில் ஒரு பருக்கைதானும் பாத்திறன் கொண்டதாகப் பலவற்றில் தேர முடியாது.

இத்தகைய சில பாடல் நூல்களில் கட்சிப் பரிந்துரையும், அதிகார அணிந்துரையும், கையூட்டுக் கரவுரையும் கூடியவைதாம் பட்டங்கள் பெறுகின்றன; பரிசுகள் வாங்குகின்றன; பாராட்டுகளில் மூழ்கித் திளைக்கின்றன!

இனி, இவற்றைவிட இன்னும் திறம் வாய்ந்த இலக்கியத் திருட்டுகளும், இலக்கியப் பரத்தமைத் தன்மையும் தமிழ் கற்றவர்கள் எனப்படுவோரில் காலத்தின் கொடுமையால் அளவுக்கதிகமாகவே காணப்படுகின்றன. ஒருவர் எழுதிய பாடல்களில் ஓரிரு சொற்களையோ ஓரிரண்டு அடிகளையோ மாற்றியமைத்துக் கொண்டு, ஆண்மையற்றதுகள் பாடிய சவலைப் பாட்டுகளை மேன் மேலும் சப்பாணியாக்கி, அவற்றையே தாம் பெற்ற பிள்ளைப் பாட்டுகள் என்று மெச்சிப் பேசி உச்சி குளிர்கிறவர்களும், அவர்களை உளமாரக் குளிப்பாட்டிக் கொண்டையத்தில் தூக்கி வைத்துக் கூத்தாடுபவர்களும் மிகுதி! மிகுதி!

நம் நாட்டு இலக்கியச் சந்தைகள் இவ்வாறான மலிந்த சரக்குகளால் நிறைந்து கிடக்க, படித்துப் பட்டம் பெற்ற பெரும் புலவர்களோ, இவை பற்றியெல்லாம் தாம் துளியும் கவலைப் படாமல், 'டாக்டர்'கள் என்றும் 'முனைவர்'கள் என்றும், தமிழ்த் துறைத் தலைவர்கள், தமிழ் வளர்ச்சி நிறுவனங்களின் இயக்குநர்கள் என்றும், தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்களென்றும், ஆராய்ச்சியாளர்கள் என்றும், ஆடிப்பாடி ஆரவாரஞ் செய்து

தமிழ் என்னும் பெயரால் அரசின் பொதுப் பணத்தை உறிஞ்சி உலா உருவதைப் பார்த்தால், தமிழ் இலக்கிய உலகம் கெட்டுக் குட்டிச்சுவராய் நிற்பதை இனி யார் வந்தாலும் நிறைவு பெறச் செய்ய முடியாததாகவே போய் விடுமோ என்று நெஞ்சாங்குலை நடுங்கிக் கவலுற வேண்டியுள்ளது.

இந்நிலையில் நம் இலக்கிய, இலக்கண உரையாசிரியர்களாகத் தம்மை அறிமுகம் செய்து கொள்வாரைப் பற்றியும் நாம் கவலை கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

இக்கால் எந்தத் தமிழ் நூலையும் எவரும் தப்பாகவோ, தவறாகவோ வாணிக நோக்கங் கொண்டு, அச்சீடு செய்யலாம். எவ்வளவு விலை வைத்தும் விற்கலாம் என்ற நிலையே இருந்து வருகிறது; மலிந்தும் வருகிறது. அதனால் திருக்குறள் உட்பட அரிய, உயரிய கழக நூற்களெல்லாம் வாய்க்கு வந்தபடி எளிய நூற்களைப்போல் உரை யெழுதப் பெற்று விற்பனைக்கு வருகின்றன. எவருக்கும் இதில் இவ்வகையில் அச்சமோ, போதிய அக்கறையோ, கவலையோ இருப்பதாகத் தெரியவில்லை. பண வருவாய் ஒன்றே குறிக்கோளாக இலக்கிய வாணிகம் அங்கிங் கெனாதபடி, அவர் இவர் என்றில்லாதபடி, எங்கும் எவரும் இவற்றைச் செய்யலாம் என்றிருந்து வருவது பெரிதும் வருந்துதற்குரிய நிலையாக இருக்கிறது.

இதில் இன்னொரு வகையான இழுக்கும் சழக்கும் என்னவென்றால், கழக நூல்களுக்கு, மூன்றாந் தர, நான்காம் தர, தமிழாசிரியர்களை வைத்து, அவர்களுக்கு இஃதொரு பகுதிநேரப் பணியாகவும், தங்கள் தங்கள் வாழ்க்கைத் தேவையை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டு, அவர்களுக்குக் குறைந்த சம்பளங்களை அல்லது கூலிகளைக் கொடுத்து, அவற்றுக்கெனவே மாரடிக்கும் செயலாகவும் இவ் வரிய பணிகளை எளிய முறைகளில் செய்து வருவதே ஆகும். பெரிய பெரிய முயற்சிகளில், சிறந்த பேராசிரியர்களையும் அறிஞர்களையும் கொண்டு, அரசும், பல்கலைக் கழகங்களும் செய்ய வேண்டியனவாக உள்ள இப் பணிகள், சந்தைக் கடைச் சரக்கு வாணிகம் போல் நடந்து வருவது அறிவுலகத்தையே இழிவு படுத்துவதும் தரந் தாழ்த்துவதுமாக இல்லையா என்பதை இதன் மேல் அக்கறையும் ஆர்வமும் உள்ள ஒரு சிலராகிலும் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

இனி, இன்னொரு வகையான கள்ள வாணிகத்தையும் இங்குச் சுட்டாமல் இருக்க இயலவில்லை. அஃதென்னவெனில், எளிய, மலிவான தமிழறிந்தவர்களை வைத்து, உயரிய, கட்டுக் கோப்பான கழக இலக்கியங்களுக்கான உரைகளை எழுதுவித்து, அவ் வுரைகளை, அறிவுலகில் தக்க தகுதியுள்ளவர்களாக ஏற்கனவே அறிமுகம் ஆகியுள்ள பேரறிஞர்கள், பேராசிரியர்கள் இவர்களின் பெயர்களால் வெளிவரச் செய்வதுதான்: இந் நிலை எத்துணை கொடுமையானது, திருட்டுத் தனமானது, இழிவானது என்பதை ஒரு நொடியேனும் எண்ணிப் பாருங்கள். இவ் வகையில் மறைந்த

வரலாற்றுப் பேராசிரியர் ஒருவர் பெயரில், யாரோ எழுதிய கலித்தொகை உரை ஒன்றும், சில, பல அக நானூறு, புறநானூற்று உரைகளும் அறிவுலகில் விலைபோகிக் கொண்டிருப் பதை நாம் நன்கு அறிவோம். அவ் வுரைகளில்தாம் எத்தனை வகையான பிழைகள், பெருமைக் குறைவுகள், இழிவுகள்! நம் அருந்தமிழ் இலக்கியங்களுக்கு இவ்வகையில் நேரும் பெருந்தவறு-களையும் பேரிழப்புகளையும் பார்த்தீர்களா? மேனாட்டாரின் ஆங்-கில இலக்கியங்களை வெளியிடுவதிலும், இந் நாட்டிலும் சமசுக்-கிருத, வங்காள மொழியிலக்கியங்களை வெளியிடுவதிலும், பிறர் பிறர் போதிய கவனங்களைச் செலுத்தும் பொழுது, நம் தமிழர்-களில் மட்டும் ஏன் இந்தக் குறைகளும் கொடுமைகளும் நிகழ்ந்து வரல் வேண்டும்? தொடர்புடையவர்கள் எண்ணிப் /பார்க்கக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வகையில், முன்னரே பற்பல குற்றங்களும் குறைகளும் நம் தமிழ் இலக்கியங்களுக்கு நேர்ந்துள்ளதையும் கவனிக்க வேண்-டும். நம் அருந்தமிழ் இலக்கியங்களுக்கு உரையெழுதிப் பதிப்பித்த ஆரியப் பார்ப்பனப் பேராசிரியர்கள், அறிஞர்கள் பலர் அவற்-றுக்குத் தங்கள் இன மேம்பாடும், வருணப் பாகுபாடும் கருதி, அவற்றுக்கு ஒரு துணை வாய்ப்பாகவும் உறுதிப் பாடாகவும் இவ் விலக்கிய அடிகளுக்கான விளக்கங்களைக் கொடுத்து உரை செய்த-தையும், அவ்வாறு செய்ய வியலாவிடத்து மூலச் சொற்களையே மாற்றியும் திருத்தியும் நீக்கியும் பதிப்பித்ததையும் நம்மில் பலர் அறிவோம். இந் நிலைகள் அனைத்துக்கும் அடிப்படை வரலாறாகத் திருக்குறள் பரிமேலழகர் உரையே கல்மேல் எழுத்துப் போல் கரி-யென-காட்சியென—நின்று கொண்டுள்ளதே!

இனி, நம் இலக்கணவுணர்வுள்ள ஆசிரியர்கள் சிலர், தொல்-காப்பிய, நன்னூல் முதலிய இலக்கணக் கூறுகளை நன்கு ஆராயம-லேயே, தாங்களும், காலம் படைத்த—உருவாக்கிய-இலக்கண ஆசிரியர்களாகத் தம்மைக் கருதிக் கொண்டு, பழையன கழித்தும் புதியன புகுத்தியும், சிற்சில புத்திலக்கணக் கருத்துகளை நூற்பாக்-களிலேயே செய்ய வேண்டும் என்னும் ஆசை கொண்டு, எளிய மிடுக்கற்ற செறிவற்ற வெற்றுச் சொல் சொலவகங்களை எழுதி இலக்கணநூல் செய்து, தம்மை இலக்கணப் புலவர்களாக அறி-முகப் படுத்திக் கொண்டு வெளிவந்து நிற்கின்றனர். இவர்களின் ஆர்வத்தையும் முயற்சியையும் பாராட்டலாம்; வரவேற்கலாம். ஆனால், ஆர்வமும் முயற்சியும் பாராட்டும் பெற விரும்பும் இவர்க-ளின் நூல்களில் விளர்ச்சியும், வெறுமையும், வறுமையும் தோன்றுகின்றனவே! இவற்றைத் தற் செருக்கின்றியும் தன்-முனைப்பின்றியும் தன்னுய்வாகக் கொண்டு பார்ப்பதே இவர் களுக்கு அழகாகும்! காலங் காலமாய் நின்றிலங்கும் தொல்காப்பி யம் போலும், நன்னூல் போலும் நிற்கின்ற உரனுடையனவாக இவர்களின் இலக்கண நூல்களும் நிற்க வேண்டும் என்று நாம் மட்டும் விரும்பினால் போதுமா? காலமும் அன்றோ விரும்புதல்

வேண்டும். தக்கன, தகாதன என்பதனை அவை அவை கால எச்சந்தானே வரையறுத்துக் காட்ட வியலும்!

நம்முடைய முன்னோர் செய்த முழுமை இலக்கிய, இலக்கண நூல்கள் வெறுமையுடையனவோ, வறுமையுடையனவோ அல்ல. வளமும் நலமும் பொருந்திக் காலங் காலமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் படைப்புகள் அவை. வெறும் இளித்தவாயர்களும் புளித்தவாயர்களும் இயற்றியவையல்ல, அவை. வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவர்கள் கண்டனவாகும். அவை அவற்றை விட இன்னும் மேம்பட்டனவாகவும் சிறந்தனவாகவும் காலத்தை வெல்வனவாகவுமாக, நாம் செய்யும் இலக்கண இலக்கியங்கள் இருக்கவேண்டாமா? வெறும் ஆர்வத்தானும், அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்து கொள்ளவேண்டிய குறுநோக்கத்தானும், இலை, தழை மிடையல்கள் போல் அவை இலங்குதல் வேண்டுமா? எண்ணிப்பாருங்கள்! ஏற்றனவே செய்யுங்கள்! அல்லது செய்வியுங்கள்!

அடுத்து, நம் தமிழ் மொழிக்கண் அறிவியல் அடிப்படையில் மொழியாய்வுத் துறையும் சொல்லாய்வுத் துறையும் மிக வளர்ந்தோங்கி விளங்குகின்றன. இந்த நிலையில் தமிழ் கற்ற அறிஞர்கள் சிலர், வெறும் இலக்கிய இலக்கணப் புலவர்கள் என்று வறிதே பழைய முறையில் தங்களை அழைத்துக் கொள்ள விரும்பாமல், புதிய அறிவியல் வளர்ச்சி நோக்குக்கு ஏற்ப, ஆய்வு அடிப்படையில், மொழியாராய்ச்சி, சொல்லாராய்ச்சித் தொடர்பினராகக் காட்டிக் கொண்டு, அவ்வகையில் தாங்கள் அழைக்கப் பெறுவதையே விரும்பினராக இருந்து வருவதை நாம் காணுகின்றோம்.

மொழியாய்வும், சொல்லாய்வும் வளர்ந்து வருவது நல்லதுதான். அவற்றின் அடிப்படையிலும் உறைத்துப் பார்த்து உண்மை காணவும் உரம்பேணவும் தகுதியும் தனிச் சிறப்பும் வாய்ந்ததும் நம் தண்டமிழ் மொழியே என்பதை மெய்ப்பிக்க அவ் வாய்வுகள் நமக்குப் பயன் தருவனவே. ஆனால் அவ்வாய்வுக்கு நம்மை அணியமாக்கிக் கொள்வதற்கு முன், அந்நிலைகளுக்கு ஏற்ப—அவ் வாய்வுக் களத்தில் நாம் நுழைதற்கு வாய்ப்பாக, நாம் நம்மைத் தகுதியாக்கிக் கொள்ள, உயர்த்திக் கொள்ள வேண்டாவா? அம் முறைகளில் ஒரு சிறிது தானும் நம்மை மேம்படுத்திக் கொள்ளாமல் நாமும் ஒரு மொழியியல் அறிஞர், சொல்லாய்வியல் அறிஞர் என்று சொல்லிக் கொள்வது, நமக்கு ஒருவகையான போலிப் பெருமையைத் தரலாம். ஆனால், ஒரு தகுதி நிலையை உருவாக்கித் தந்து விடாது.

இற்றை இலக்கியத் திறன் வாய்ந்த புலவர்கள் சிலரும், ஒரு சொல் பல்பொருள் கற்றுச் சொல்லின் தொகை யறிந்த அளவினானே, மொழியாய்வுப் புலத்திலும் சொல்லாய்வுக் களத்திலும் கால் வைப்பது பெரிதும் வருந்தத் தக்கதும் இரங்கத் தக்கதும் ஆகும்.

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும் (405)

கல்லாத மேற்கொண்(டு) ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும் (845)
வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு (844)

-என்னும் திருவள்ளுவர் திருவாய் மொழிகட்கு இலக்கியமாகத் திகழும், அம் மொழி, சொல்லாராய்ச்சிப் பேராசிரியர்கள் தமிழ் மொழிக்கு எவ்வகையானும் ஏற்றந் தந்துவிட இயலாது. இத்தகையவர்களை, முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்த சொல்லாய்வுப் புலமையாளர்களின் வழி முறைகளாக வைத்து வழிபடும் வணிகவியல் தொண்டர்கள் சிலர், தம் வருவாயைப் பெருக்கிக் கொள்ள வந்து வாய்த்தவர்களாக அவர்களைத் தம் மனத்துட் கொண்டு, அவர்களுக்கு வானளாவும் விளம்பரமும், தேனளாவும் பட்டப் பெயர்களும் தந்து, தமிழகத்தில் தம்மை மேன்மேலும் வளர்த்துக் கொள்ளும் வன்கண்மையை என்னென்பது? (தொடரும்)

## அப்பாத்துரையார் குடும்பத்திற்கு அருள்கனிந்து உதவுங்கள்!

இது தொடர்பான முழு அறிக்கையையும் சென்ற தென்மொழி சுவடி : 25, ஓலை : 5, தமிழ்நிலம் இதழெண் 134-இல் கண்ணுற்றிருப்பீர்கள். இல்லையானால், இப்பொழுதாவது எடுத்துப் படியுங்கள். படித்தவுடன் உங்கள் உள்ளத்தில் எந்த மூலையிலாவது ஓர் இரக்கவுணர்வு தோன்றுமானால், இன்றே, இப்பொழுதே உங்கள் கைகளில் உள்ளதைப் பன்மொழிப் புலவர் அப்பாத்துரையாரின் துணைவியார்க்குக் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி விட்டுத் தென்மொழிக்கு ஓர் அஞ்சலட்டையில் செய்தி தெரிவியுங்கள். மறவாதீர்கள்.

தொகை விடுக்க வேண்டிய முகவரி:
திருவாட்டி, அலர்மேலு அப்பாத்துரை
10, அப்பாத்துரையார் தெரு,
தேனாம்பேட்டை, சென்னை-18.

அன்பன்
பெருஞ்சித்திரனார்.

## புலவர், திருக்குறள்மணி இறைக்குருவனாரின் மலேசிய, சிங்கைச் சுற்றுச் செலவு!

அருந்தமிழ்த் தொண்டரும், தென்மொழிக் குடும்ப உறவாண்மையரும், சென்னைத் தமிழ் நெறிக் குடும்ப அமைப்பாளரும், சென்னை, முரசொலியின் துணை ஆசிரியரும் ஆகிய புலவர், திருக்குறள்மணி இறைக்குருவனார், அங்குள்ள பல்வேறு தமிழ் அமைப்புகளின் அழைப்பின் பேரில், கடந்த 16-2-90 அன்று இரவு 1 மணியளவில் மலேசியன் வானூர்தி வழி, கோலாலம்பூர் சென்றார். புலவர் அவர்களின் மலேசிய, சிங்கைச் செலவு ஏறத்தாழ ஒரு மாத அளவு நிகழும் என்று தெரிகிறது.

# தென்மொழி 30-ஆம் ஆண்டு நினைவுகள்!

*இயல்: 1, இசை: 1—(1—8—59)*

## தமிழின் தற்கால நிலை!

தமிழ் மொழியை முறையாகப் பயில்வாரும் சிலரே! பயிற்றும் கல்லூரிகளும் சிலவே; நம் அரசினர் மொழியாகிய ஆங்கிலத்தால் நெருக்குண்டு, இது தன்னுருக் கரந்து அங்குமிங்கும் சிறிது உறைவுண்டு ஒல்கியிருக்கின்றது. போற்றுவாரின்மையால், வேற்றிடம் பெயர்தற்கும் வழியில்லை. ஆர்வமிக்குப் பயல முயல்வாரும் பொருள்வருவாயைக் கருதிப் பின் வாங்குகின்றனர். பொருள்வருவாயைப் பொருட்படுத்தாத தகுதியுடையார்க்குத் தன்கண் விருப்பமுண்டாதல் அரிதாகின்றது. சில இளைஞர்கள் காலத்தின் விரைவுக்கேற்றவாறு, ஒரு நூலையேனும் அழுந்தி ஆராயாமல் நுனிப்புல் மேய்ந்து, இக்கால நாகரிகத்திற்கு ஒத்த வண்ணம் எங்கணும் உலாவித் திரியும் தாளிகைகளில் வெளிப்படும் சில கட்டுரைகளைப் பயின்ற அம்மட்டில், தம் கல்வி முற்றியதாக நினைந்து, தாமும் அம்முறையிற் காலங்கழிக்க எண்ணுகின்றனர்.

பண்டைக்காலம் போலக் கற்றவல்ல பெரும்புலவர்கட்கு முற்றூட்டாக நிலம், பொருள் முதலியன கொடுத்துப் பேணும் புரவலரும் இலர். ஆரவாரமின்றி அறிவு விளக்கங் கருதிக் கல்வி பயின்று அடக்கம் மேற்கொண்டொழுகுவாரைப் பெருமைப் படுத்துவாரும் சுருங்கினர்.

போலிப் பயிற்சியும், போலியறிவும், அப்போலியறிவுடையாரைப் பாராட்டுதலுமே எங்கணும் மல்கின... சிலர் வேறு வழியில் தாம் உயர்ந்த நிலையை யடைந்திருப்பதாக எண்ணித் தமிழிலும் தம் புலமை முற்றுப் பெற்றதாக உலகம் கொள்ள விழைந்து, தமிழிற் பாட்டுப் பாட முயல்கின்றனர். அந்தோ! அவர் பாட்டை நினையுங்கால் தமிழ் மொழியாளர் செயல் இத்தகையது போலும் என்று, பிறமொழியாளர் எள்ளி நகையாடற் கிலக்காகின்றதே என்று வருந்தவேண்டியதாகின்றது...சிறந்த நடையில் எழுதுவார் மிகச் சிலரே! சிறந்த...எளிய நடையாவது இலக்கணப் பிழையின்றித் திரி சொற்கள் பெரிது விரவாமல் இயற் சொற்களால் இயல்வதாகும்.

—பண்டிதமணி மு. கதிரேசனார்.

## தமிழருக்கு ஒரு வேண்டுகோள்!

மொழி நமக்கு விழி! நாடு நமக்கு வீடு!

மொழியுணர்வும், நாட்டுப் பற்றும் உலக ஒற்றுமைக்கு வித்தும் எருவும் ஆகும்.

இவை இல்லாமற் போனால் அடிமை வளரும்! மிடிமை பெருகும்!

தமிழர்க்குத் தமிழ்மொழியும் தமிழ்நாடும், உயிரும் உணர்வும் ஆகும்.

அத்தகைய கலப்பில்லாத உண்மைத் தமிழ் மக்கள், தாங்கள் எவ்வாறு நடத்தல் வேண்டும் என்று அறிதல் வேண்டாமா?

- தம் தம் பெயரைத் தூய தனித் தமிழ்ப் பெயராக்குதல் வேண்டும்.
- தம் மக்கட்கும் வீட்டிற்கும் தனித் தமிழ்ப் பெயர்களையே சூட்டுதல் வேண்டும்.
- நம் பெயரோடு ஒட்டி நம்மை நாமறியாமல் அடிமைப்படுத்தும் சாதிப் பெயரைத் 'தூ'வென விரட்டுதல் வேண்டும்.
- தம்மைத் தெரிவிக்குங்கால் 'தமிழன்' என்றே கூறுதல் வேண்டும். அதைச் சட்டமும் மக்களும் புறக்கணித்தால் அவர் தம்மை விட்டுத் தொலை போக வேண்டும்.
- நெஞ்சத் தூய்மையும் ஒழுக்கமும் தலையாகக் கொள்ளல் வேண்டும்.
- மொழியறிஞர் தம்மையும், நாட்டுப் பெரியோரையும் போற்றிப் புரத்தல் வேண்டும்.
- தனிக்கட்சி வகுக்காமல், மொழியுணர்வாலும், நாட்டுப் பற்றாலும் ஒருங்கு சேரல் வேண்டும்.
- கூடிய மட்டும் பிறமொழிக் கலப்பின்றி (மானத்தோடு) எழுதுதல் பேசுதல் வேண்டும்.

இவ்வாறு கொண்டு ஒழுகுவார் இழப்பது ஒன்றுமில்லை; பெறுவது கோடி!

தூய்மையான தமிழ்க்குருதி உடலிலோடும் தமிழ் மாந்தர்க்கே இவை ஏற்றனவாகும்!

சோற்றுப் பருக்கைக்கு அங்காந்து, வீசும் காசுக்குக் கையேந்தி, தாளைவற்குத் தலை சாய்க்கும் தமிழர், நம் நாட்டில் முளைத்த காளான்கள் எனக் கொள்ளுங்கள்!

அவர் இறப்பின், அவர்தம் உடல்கள் கள்ளிக்கு எருவாகுமேயன்றி மக்கட்கு அருவி ஆகா என்று கூறி, அவர் பற்றிக் கவலை கொள்ளல் வேண்டாம்.

## புற்றீசல் நூல்கள்!

புறநானூறு, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள் தமிழ் நாட்டில் இன்னுஞ் சில ஆயிரம் படிகட்கு மேல் செலவாகவில்லை.

ஆனுல், கதைப் புத்தகங்களும், கதைகளையே கொண்டு வெளி வரும் திங்கள் தாள்களும் பல ஆயிரக்கணக்கில் செலவாகின்றன. இதனுல் இவை சிலப்பதிகாரத்தைவிடச் சிறந்தவை என்று யாரும் கூற முன்வருவதில்லையல்லவா?

இத் திங்கள் தாள்களைப் போலவே சில நூல்களும் தோன்று- கின்றன. இத்தகைய நூல்கட்கு இன்றைய தமிழ்நாட்டில் பஞ்சமே இல்லை. புற்றீசல்கள் போலத் தோன்றும் இந் நூல்கள் அவ்வீசல்கள் போலவே மறைந்துவிடும். சில ஆண்டுகள் அல்லது ஒரு தலைமுறை கழிந்த பின்னர் ஒருவரும் இத்தகைய நூல்களைக் கண்ணெடுத்தும் பாரார். அதோடு மட்டுமன்று. இதனை விரும்- பிக் கற்ற தங்கள் முதல் தலைமுறையார்களின் மதியைக் கண்டு வியப்பும் அடைவர். இதிலிருந்து அறியப்படும் உண்மை ஒன்று உண்டு.

நூல் மட்டுமன்று; எந்த ஒரு கலையும் தான் தோன்றும் காலத்தில் வாழும் மக்களினத்தின் மனப்பான்மைக்கு மட்டும் இரை போடுவதாயின், அக் கலை நீண்ட நாள்கள் வாழ முடியாது. இத்தகையவற்றை ஆக்குபவர் கலைஞருமல்லர். இவர்கள் ஆக்கும் நூல்கள் கலைகளுமல்ல. — அ.ச. ஞானசம்பந்தன். க.ழு.

'இலக்கியக்கலை'

இயல்: 1, இசை: 2, (17—8—59)

## தனித்தமிழ்ப் பயிற்சி

(ஆசிரியவுரை)

...அண்மையில் சென்னையில் நடந்த தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகட்குத் தலைமை ஏற்ற திருவாளர். இரா. சீ. தேசிகன் என்பார், தமிழில் வடமொழிச் சொற்கள் கலந்து வருவது தமிழைச் சிறப்பிப்பதாயிருப்பதாக- வும், வேண்டுமென்றே வடமொழிச் சொற்களை நீக்கி எழுதுவதே மறைமலையடிகளார் எழுத்து என்று கூறிப் பெருமைப்படுகின்றார்- கள் என்றும் உரைத்து, அப்படி எழுதுவது ஒரு தமிழா, உரை நடைதானு, என்றும் கேட்டிருக்கின்ருர். இவர் பேச்சைக் கேட்- டுக் கொண்டிருந்தார் அனைவரும் தமிழர்கட்கே பிறந்தவரா- யினும் அறிஞர். திரு.அ. சிதம்பரநாதன் ஒருவரே ''தனித்தமிழில் உரைநடை எழுத மதுகை (ஆற்றல்) இல்லாமற்போவார், தனித் தமிழில் எழுதுவாரைக் குற்றம் கூறுதல் அறியாமையாகும்'' என்றும், ''இவ்வாறு தனித்தமிழ்ப் புலவர் தம்மைக் குறைவு படுத்திக்கூறும் எத்தகைய எழுத்தாளர்க்கும் தமிழ் நாட்டில் இடமில்லை'' என்றும் முழங்கியிருக்கின்ருர். இவர் தம் தமிழ் மானத்திற்கு நாம் தலை வணங்குகிருேம்.

மொழியறிவும் மொழிப்பற்றுமின்றித் தம் பிழைப்பிற்காக உண்மையை மறைத்து உளறுவார், தமிழில் வடமொழி கலந்து எழுதுவதே போல ஆங்கிலத்திலும், தமிழையும் வடமொழியை-

யும் கலந்து எழுதிக் காட்டுவாரோ? காட்டுவதன்றியும் அதையே சிறப்பு என்றும் இவர் வலியுறுத்துவாரோ? திரு. தேசிகனார் மட்டுமன்றிக் கல்வியமைச்சர் திரு. சி. சுப்பிரணியனாரும் பற்பல விடங்களில், 'மொழி வளர்ச்சிக்குப் பன்மொழிக் கலவை துணை புரியுமென்றும், அவ்வாறு கலக்கக்கூடாது என்பது வெறிச் செயலாகும்' என்றும் கூறிவருவது நாம் அறிந்ததே. தமிழ்நாட்டுக் கல்வியமைச்சர் வாயினின்று இவ்வாறு இழுக்கிய கருத்து வருவது தமிழ்நாட்டின் கெட்ட காலமே.. இத்தகையோர் தமிழ் எழுத்தாளர் மாநாடு என்று கூட்டுவதைவிட "கலப்பு பாஷா ரைட்டர்ஸ் கான்பிரன்ஸ்" என்று கூட்டலாமே!

தம்முடைய திறமையின்மையால் தனித்தமிழ்ப் பயிற்சி கூடாது என்று மொழிவார் சார்பாக நின்று தமிழர் என்று தோள் தட்டுவார்க்கும் ஒன்று கூற விரும்புகின்றோம்.

பண்டைத்தமிழ் இனத்தவரும், தண்டமிழ்ப் புலவரும் தாங்கள் தமிழ்ப் புலவரெனக் கூறப்படுவதற்கிணங்க தனித் தமிழில் எழுதியும் பேசியும் வருகின்றனரா என்று அவர்கள் எண்ணிப் பார்த்தல் வேண்டும். அவரே அவ்வாறில்லையானால், ஒன்றும் அறியாத பொதுமக்கட்கும் அவர் தம்மை அடிமைப்படுத்தும் கூட்டத்தாருக்கும் தனித்தமிழ் உணர்வும், மான உணர்வும் எங்ஙனம் இருக்கும் என்பதை உன்னிப் பார்க்கவேண்டுகின்றோம்,

## பேச்சோ பேச்சு!

நம் நாட்டவர்க்கோ அறிவாராய்ச்சி இல்லாமையோடு ஒற்றுமைக் குணமும் இல்லை. தமக்குத் தம் மனைவி மக்களும், நெருங்கிய உறவினருமே உரியவரெனவும், மற்றையோரெல்லாம் தமக்கு வேறானவரெனவும், தாமும் தம்மினத் தவரும் நன்றாயிருத்தலே தமக்கு வேண்டும், தம்மவரல்லாத பிறர் எக்கேடு கெட்டாலென்ன, எத்தெருவே போனாலென்ன என நினைத்துப் பிறர் நலத்தைச் சிறிதும் கருதாதவர்களாய் இருக்கின்றனர்; தன்னலம் கருதும் இப்பொல்லாத எண்ணத்தால் இத் தமிழ் நாட்டவருக்குள் பிரிந்திருக்கும் அளவிறந்த சாதிகளும் அவற்றால் விளைந்திருக்கும் அளவிறந்த வேற்றுமைகளும் கணக்கிட்டுச் சொல்லல் இயலாது.

நாலுபேர் ஒன்று சேர்வார்களானால் சாதிப் பேச்சும், பெண் கொடுக்கல் வாங்கலைப் பற்றிய பேச்சும், அவன் சாதி கெட்டவன், அவனுக்கும் நமக்கும் உறவு கிடையாது, எங்கள் சாதி உயர்ந்தது, எங்கள் சாதியில் ஒடித்தால் பால் வடியும், எங்களின் பக்கத்து வீட்டுக்காரரோடுதாம் நாங்கள் கலப்பது வழக்கம், மற்றவர்கள் கையில் தண்ணீர் கூட வாங்கமாட்டோம், என்னும் பேச்சும், அதுவும் விட்டால் பொருள் தேடும் வகைகளைப் பற்றிய பேச்சும், அதுவும் விட்டால் தமக்குப் பொருள் சேராக் காலத்தைப் பற்றியும், நோய் தீரும் நேரத்தைப் பற்றியும், மணம் ஆகும் நாளைப் பற்றியும், எந்த இடத்திற்குப் போனால் குறி கேட்கலாம்,

# தொல்காப்பியம்!

உரைப் பெரும்புலவர். சந்திர பாலசுந்தரனுர்.

தொல்காப்பிய நூற்பாக்களின் அடிப்படையில், எழுத்திலக்கணக் கோட்பாடுகள் கீழே சுருக்கமாகத் தரப்பெற்றுள்ளன. (நூலிலுள்ள சில வடசொற்கள் தூய தமிழாக்கப் பெருமல் அவ்வாறே வெளியிடப் பெறுகின்றன;)

எழுத்து ஒசையும் எழுத்தும்:

எழுத்தொலிகள் மூல அடிப்படையின் மேல் அமைந்துள்ள, நாததத்துவம். சிதாகாசம் என்னும் உச்சி நடுவின் உணர்வினுல் தூண்டப் பெற்றுக் கிளர்ந்து, உயிர்க் காற்றினது (பிராணன்) ஓசையாய் வளியொடு கூடி இசை மயமாய், உந்தியில் நிலைகொள்ளும் என்பது ஒக நூல் முடிபாகும்.

அவ் வளியிசை, சிந்தையில் நிகழும் கருத்துகளைத் தனக்கு நிலையாகவும் பிறர்க்கு அவர்தம் செவி வாயிலாகப் புறநிலையாகவும், அறிவிக்கும் முறைமையில் உருப்பெற்று நிகழும். இவற்றை முறையே 'அகத்தெழு வளியிசை' என்றும், 'எழுந்து புறத்திசைக்கும் மெய்தெரி வளியிசை' என்றும், இவ் வாசிரியர் கூறுவர்.

அகத்தெழு வளியிசை உள்ளுணர்வுடைய ஞான ஒகியர்க்கே புலனுகும். புறத்தெழு வளியிசை செவிப் பழுதில்லா மக்கள் யாவர்க்கும் புலனுகும். எனவே, வளியிசைக் கூறுகள் இருதிறத்தனவாகும், எனத் தொல்காப்பியம் புலப் படுத்துகிறது. (பிறப்பியல்—20)

இவ் விருவகையுள், புறத்தெழு வளியிசை முயற்சியானும். வாயுறுப்புகளின் செயற்பாட்டானும் பல்வேறு வடிவு கொண்டு நிகழும். அகத்தெழு வளியிசை எழுத்தின் அளவும் பயனும் அறிவோர் நிறை மொழி மாந்தரானும்—புறத்தெழு வளியிசை எழுத்தின் அளவும் பயனும் யாவரானும் அறிதற்குரியவாம்.

புறத்தெழு வளியின் நாதம் (உயிர்ப்பு), இசை (ஒற்று) ஒலி (அஃகு) ஓசை என முத்திறப்படும். இவை முறையே உயிரெழுத்து

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

எந்தத் தெய்வத்துக்கு ஆடு, கோழி அறுத்தால் இவை கைகூடும்; மாரியைக் கும்பிடலாமா, மதுரை வீரனைக் கும்பிடலாமா, காளியைக் கும்பிடலாமா என்னும் சிறு தெய்வச் சிற்றுயிர்க் கொலைக் கொடும் பேச்சும், தனக்குப் பகையானவனைப் பல வகையால் இழித்துத் தன்னைப் பல வகையால் உயர்த்துச் செருக்கிப் பேசும் பேச்சுமே, எங்கும் எல்லோரும் பேசக் காண்கிறேம்; புகை வண்டிகளிலும் இந்தப் பேச்சே! பொதுக் கூட்டங்களிலும் இந்தப் பேச்சே! கோயில்களிலும் இந்தப் பேச்சே! குளக்கரைகளிலும் இந்தப் பேச்சே! —மறைமலையடிகள், 'அறிவுரைக்கொத்து'

(தொடரும்)

கலையும் குற்றியலிகரக் குற்றியலுகரங்களையும், புள்ளி மெய்களையும், ஆய்த எழுத்தினையும் வெளிப்படுத்தும். இம் மூவகை ஓசைகளுள், இசையும் ஒலியும் கலந்தும் வரும். அஃகோசை தனித்தே வரும். செவிப்புலனாகும் இவ் வெழுத்துகள் யாவும் கண்டத்தினின்று வெளிப்பட்டு மெய்ப்பாட்டு நிலையாற் புலனாகும்.

தமிழ்மொழிக்குரிய முப்பத்துமூன்று எழுத்துகளும், வெளிப்படுங்கால், தலையும் மிடறும் நெஞ்சும் வளி ஊன்றுமிடமாக அமைந்து, நெஞ்சுவளியிசையானும் மிடற்றுவளியிசையானும் மூக்கு வளியிசையானும் உருப்பெற்று வரும்.

இவ் வளியிசையை வடிவு செய்து உருப்படுத்தும் உறுப்புகள் மிடற்றுக்குழல், மிடற்றுக்கு மேலுள்ள மூக்குக் குழல் அண்ணம், அண்பல், நா, இதழ் ஆகியவையாம். (பிறப்பியல்-1)

உந்தி முதலாக எழும் வளியிசை தலை, மிடறு, நெஞ்சு என்னும் மூன்றிடங்களில் உணர்வழுத்தம் பெற்று யாவும் கண்டத்தினின்று வெளிப்படும். அங்ஙனம் வெளிப்படுங்கால், நாவும் இதழும் தடை செய்யாது நிற்பின், அவ்வோசை உயிர்ப்பிசையாய் உயிரெழுத்துகளைப் பிறப்பிக்கும்; நாவும் இதழும் பல்லும் அண்ணமும் செயற்பட்டுத் தடைசெய்து வெளிப் படுத்தின் அவ் வொலிகள் மெய் யெழுத்துகளைப் பிறப்பிக்கும்.

உயிரெழுத்து: வாயுறுப்புகளின் செயற்பாடின்றி அவை சமநிலையில் நிற்க, வாய் அங்காப்ப, மிடற்றெழு வளியிசையான் வெளிப்படும் உயிர்ப்பிசையே அகரமென்னும் அடிப்படையெழுத்தாகும். இவ் வகரம் எல்லா எழுத்துகளுக்கும் மூலமாகவும் துணையாகவும் அகநிலையிற் செயல்படும். அஃதாவது, அகர வொலியின் திரிபுகளே பல்வேறு எழுத்தாச் செவிப்புலனாகவும்.

அகரமாகிய எழுத்தே, வாய் இதழ்களின் கோணத்தானும் நா விளிம்பின் விரிவானும் சுருக்கத்தானும் ஏனைப் பதினொரு வகையாகிப் பன்னிரண்டு உயிரெழுத்தாகத் திகழ்கின்றது.

உயிர்மெய்: அங்ஙனம் பன்னிரண்டு கோணங்களில் வெளி வரும் உயிர்ப்பிசையினை, நாவானது அண்பலோடும் அண்ணத்தோடும் உற்றும் உறழ்ந்தும் இதழானது பல்லொடும் இதழொடும் இயைந்தும் தடைப்படுத்தி வெளிப்படுத்தும் நிலைமையான வருவன உயிர்மெய் எழுத்துகளாகும்.

மெய்: நா முதலிய உறுப்புகள் செயற்படும் நிலைகளுள் பதினொரு நிலைகளை வரையறை செய்து அவற்றான் வடிவு கொள்ளும் நிலையைத் தமிழ் நூலார் மெய்யென அழைத்துக் கொண்டுள்ளனர். பதினொரு நிலைகளுள் ஆறு நிலைகள் வளியிசை காரணமாக இரண்டிரண்டாக வெளிப்படும். ஒருநிலை சிறு வேறுபாடு காரணமாக இரண்டாக வெளிப்படும். அம் முறையாற் பதினெட்டு மெய் வடிவங்கள் அமைந்துள்ளன......

குறிப்பு: பேச்சுமொழி முந்தியது. எழுத்துமொழி பிந்தியது. பேச்சுமொழியின்கண் அமைந்துள்ள ஒலிக் கூறுகளை நன்கு ஆராய்ந்து வகுத்துக் கொண்ட, செவிப்புலனாகும் உருவங்களே

எழுத்துகளாகும்; எழுத்தென்பவை ஒலி வடிவங்களே. அவ்வொலி வடிவங்களைப் பயிற்றவும் பயிலவும் கட்புலனாக அமைத்துக் கொண்ட அடையாளங்களே வரிவடிவ எழுத்துகள். ஒலிவடிவம் முந்தியது; வரிவடிவம் பிந்தியது. ஒலி வடிவம் என்ஞ்ஞான்றும் வேறுபடாதது. வரிவடிவம் தேவைக் கேற்பக் காலந்தொறும் வேறு படுவது. அதனான் வரிவடிவு பற்றித் தொன்னூலோர் இலக்கண விதி கூறாராயினர்.

எழுத்தென்பது ஒலிவடிவம் வரிவடிவம் இரண்டையும் குறிக்கும் பொதுக் குறியீடு. ஒலிவடிவம் நிகழ்காலத்திற்குரியது. வரிவடிவம் நிகழ்வு எதிர்வு இரண்டிற்கும் உரியது.

பேச்சு மொழியில் நேரும் குறைபாடுகள் மொழியைச் சிதைத்து விடா. எழுத்து மொழியில் நேரும் குறைபாடுகள் மொழியைச் சிதைந்து விடும். பேச்சு மொழியை ஒழுங்கு செய்வது எழுத்து மொழி. காத்தற்குரியது எழுத்து மொழியாகும்.

## பாயிரம்

பாயிரம் என்பது, நூலைப்பற்றிய தொரு சிறு குறிப்பாதலின் அதற்கு 'வரலாறு' என்று பொருள் கூறுவோர் உரையாசிரியன்மார். ஒருநூலைப் பயில விழைவோர் அதுபற்றிய வரலாற்றினை அறிய அவாவுதல் கடப்பாடாதலின், அஃது நூலுக்கு இன்றியமையாததோர் உறுப்பாதல் தெளியப்படும்.

...நூல் நுதலிய பொருளை யன்றி ஆக்கியோன் பெயரானும் ஆக்குவித்தோன் பெயரானும், யாப்பு, அளவை முதலியவற்றானும் நூற்பெயர்கள் அமைதலின் பாயிரம் இன்றியமையாதது எனக் கொண்டனர் புலவோர்...

பொதுப் பாயிரம் என்பது நூலின் பொதுவான அமைப்பையும், அதனைப் பயிற்றுவிக்கும் ஆசிரியனுடைய தகவு, சால்பு ஆகியவை பற்றியும், பயிலும் மாணாக்கரது தகவு, பண்பு ஆகியவை பற்றியும், ஆசிரியன் பற்றியும் முறைமை பயிற்றும் மாணாக்கன் பயிலும் முறைமை பற்றியும் விரிவாக வரையறை செய்கின்றது.

சிறப்புப் பாயிரம் என்பது, குறிப்பிட்டதொரு நூலைச் செய்த ஆசிரியன் பெயர் முதலிய குறிப்பும், அந் நூலின் வகையும் அது வழங்குதற்குரிய நில எல்லையும், நூலின் அமைப்பளவும், அதன் பெயர் விளக்கமும், நூலியன்ற யாப்பு முறைமையும், அஃது உணர்த்தும் பொருளும், அதனை ஆராய்ந்து ஏற்பளித்த நூலோரவை, அவை முதல்வர் பற்றிய குறிப்பும், அரங்கேறிய அவையும், காலமும், அந் நூலைச் செய்தமைக்குரிய காரணமும், அதனைப் பயில்வதால் எய்தும் பயனும் பற்றிச் சுருக்கமாக வரையறை செய்கின்றது......

இனி, இச்சிறப்புப் பாயிரத்தை நூலாசிரியன் செய்வதில்லை; காரணம்: அது தற்புகழ்ச்சியாகி விடுமெனக் கருதியமையே எனலாம்; அதனான் சிறப்புப் பாயிரத்தைத் தன்னாசிரியன், தன் மாணாக்கன் தன்னொடு கற்றோன் ஆகியோர் செய்யும் மரபு அமைந்தது;

இனி, ஆசிரியனே பாயிரஞ் செய்யும் மரபும் உளது. அதற்குத் தற்சிறப்புப் பாயிரம் என்பது பெயர்...

ஆசிரியர் தொல்காப்பியர் பாயிரம் பற்றி எடுத்துக் கூறு-விடினும் அவையடக்கத்தைப் பற்றிச் செய்யுளியற் கண்ணே கூறுவதனால் பாயிரம் கூறும் முறைமை தொன்மையானதெனக் கொள்ளலாம். அவர் தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும் அவையடக்கமும் கூறித் தம் நூலைத் தொடங்கினரா, இல்லையா என்பது அறியக்கூடவில்லை.

ஆசிரியர் தம் நூலுள் கூறும் இலக்கணங்களையெல்லாம் என்ப, என்றிசினோர், என்மனார் புலவர் எனச் சுட்டிச் செல்வ-தனான் இதனைத் தமது படைப்பாகக் கருதினாரில்லை போலும்; அங்ஙனம் கூறிச் செல்லுதலையே அவர் தம் அவையடக்கமாக நாம் கருதலாம். பாயிர ஆசிரியரும் இந்நூலைச் 'செய்தான்' எனக் கூறாமல் 'புலந்தொகுத்தோனே' என்றுதான் பாராட்டுகிறார்...

பனம்பாரனார் தொல்காப்பியருடன் பயின்ற ஒருசாலை மாணாக்கர் என்பது உரையாசிரியன்மார் கூறும் குறிப்புகளால் அறியப்படுகின்றது. இப் பாயிரத்தினால் இவரது ஒப்பற்ற புலமையும், ஆழ்ந்தகன்ற நுண்ணறிவும், பல்கலைப் பயில்வும் சான்றாண்மையும் தெள்ளிதிற் புலனாம். இப் பாயிரம் காலத்தான் முற்பட்டதென்பதன்றியும், பாயிர இலக்கணம் வகுத்துக் கோடற்கு இலக்கியமாக அமைந்ததும் இதுவேயாம்...

இதன், சிறப்புப் பாயிரம் செய்தார் தொல்காப்பியனாரோடு ஒருங்கு பயின்ற பனம்பாரனார் என்ப. (இன்றைய மலையாள நாட்டில் சில பிரிவினர் பெயரோடு 'பனம்பாரா' என்பது, பட்டப்பெயர் போல இணைந்து வழங்குதலைக் காணலாம்.) பனம்பார்—பனை மரத்தால் சிறப்புப் பெற்றதோர் ஊரின் பெயர்; (பனம்பார்-ஏழ்பனை நாட்டைக் குறிக்கலாம். பனம் + பார் = பனம் பார். (பார்—உலகம்).) கடல் கொண்ட குமரி நாட்டகத்து ஏழ் குறும்பனை நாடு என்பது ஒரு பகுதி எனத் தொல்லுரையாளர் கூறுதலின் இஃது அந் நாட்டகத்ததோர் ஊர் போலும். இப் பாயிர ஆசிரியர் பனைநாட்டுப் பனையூரினர் என்றதனான் நூலின் தொன்மை நன்கு விளங்கும். இவ்வாசிரியர் தொல்காப்பியம் அரங்கேறிய காலத்து வாழ்ந்தவர் என்பதும், ஆசிரியரை நன்கு தெரிந்துணர்ந்தவர் என்பதும், பிறவும் இவர் பாயிரத்தால் தெளியப் பெறும்.

பாயிரம்—பொழிப்புரை:

வடக்கின்கண் வேங்கடமும், தெற்கின்கண் குமரியும் ஆகிய அவ்விரண்டெல்லைகட்கும் இடைப்பட்டதாகிய தமிழ்மொழியை வழங்கும் மக்கள் வாழும் நலஞ்சான்ற உலகிடத்து விளங்கும், ஒலியாலாகும் எழுத்துகளின் அமைப்பியல் மரபினையும், அவற்றா-லாகும் சொல்லாக்க மரபுகளையும், அவை கருவியாக உணரப்-படும் பொருளியல்பு முறைகளையும், நடுவுநிலையோடு ஆராய்ந்து, தானும் ஓர் இயற்றமிழ் இலக்கணப்பனுவலைச் சுருக்கமாகச்

செய்துதரல் வேண்டிச் செந்தமிழ் இயல்பு பொருந்திய முந்திய யாப்பின் வழி வந்த செய்யுள் இலக்கியங்களோடு இலக்கண நூல்களேயும் கற்றுத் தெளிந்து, நோக்கி ஆராய்ந்தவற்றையும், கற்றுத் தெளிந்தவற்றையும் முறையாகக் கருதிச் செய்யத் துணிந்து, கூறியது கூறல் முதலாய குற்றங்களற்ற பனுவலாக அவ் விலக்கணங்களைத் தொகுத்தளித்தான். அவன் யாவன் எனின் ஆற்றுரது நிலத்தினைக் கைக் கொண்டு தன்கீழ் ஆற்று-வாராய் வாழ்வார்க்குத் தந்தளிக்கும் வெற்றித் திருவினையுடைய பாண்டியனது நூலோரவையின் கண் நடுவனுக அமர்ந்து, ஒரு பாற் கோடாமல் அறமே கூறும் நாநயமுடைய, நான்காகிய மறைநூற் பொருளறிவு முதிர்ந்த அதங்கோடென்னும் ஊரின னுகிய ஆசிரியனுக்குத் தான் செய்த நூலைக் குறைவறத் தெரி-வித்து (உயிர்மெய்யை உயிராகக் கோடல் அளபெடைகளை எழுத்தாக எண்ணுதல் முதலாகப் பிறர் கூறும்) மயக்கங்களில்லாத, தமிழ் மரபோடு அமைந்த எழுத்திலக்கணங்களை முறைப்பட எடுத்துக் காட்டிக் கடல் சூழ்ந்த இவ்வுலகத்தின் கண் ஐந்திர நூலினை முற்றக் கற்றுணர்ந்த தொல்காப்பியன் என்னும் காரணப் பெயரைத் தன் நூலாலே தோற்றுவித்துப் பல புகழையும் மறையாமல் நிலை நிறுத்திய தவ ஒழுக்கத்தால் ஒளிரும் திருவடி-வினையுடையோன் என்றவாறு.

எனவே, இந்நூலுக்குத் 'தொன்மையான தமிழ் இலக்கண மரபிற்குக் காப்பாக இயங்கும் நூல்' என்னும் காரணம் தோன்ற (தொல் காப்பு இயம்) தொல்காப்பியம் என்னும் பெயரை இவ்-வாசிரியனே இட்டளித்தான் என்பது போதரும்......

தொல்காப்பியர் இந்நூலைச் செய்த காலத்திருந்து தமிழகத்-தின் நாற்பேரெல்லை கூறுவாராய் வடவேங்கடமும் தென்குமரியும், வடக்கிலும் தெற்கிலும் அகப்பாட்டெல்லையாக இருந்தமை கண்டு கூறிக் கிழக்கும் மேற்கும் கடலே எல்லையாக இருந்தமை-யின் கூருராயினர் என்ப. வேங்கடம் மலையாதலின் குமரியும் மலையாக இருத்தல் வேண்டும் என்ப. (தொடரும்)

## திருக்குறள் பதின்கவனகர் வழித் தோன்றல் வாழ்க!

கோயில்பட்டி, மறைந்த திருக்குறள் பதின்கவனகர் பெ. இராமையா அவர்களின் மகன், மருத்துவர் இரா, கருணை-யானந்தம் அவர்களுக்கு அண்மையில் பிறந்த ஆண் மகவிற்குத் தந்தையின் நினைவாகக் 'கவின்மொழி ராமன்' என்று பெயரிட்ட அவ்விழாவின் நினைவாய்த் தென்மொழி வளர்ச்சிக்கு என விடுக்கப் பெற்ற அன்பளிப்பு உரு 100/- (உருா நூறு) வரப் பெற்-றோம்: மகிழ்ச்சி. நன்றி.

செல்வன்: கவின்மொழிஇராமன் தம் பாட்டனுரைப் போன்றே பெயரும் புகழும் பெற்று, வளனும் நலனும் வந்து பொருந்த, தண்டமிழ் மொழிக்கும் இனத்திற்கும் நாட்டிற்கும் தாழ்விலாத் தொண்டு செய்து சிறக்க எல்லாம் வல்ல இறைப் பேரருளைத் தென்மொழி வேண்டுகிறது. ○

# ‘கிரிக்கெட்’ எனும் வெறி!

## (ஒரு குமுகவியல் பார்வை)

முனைவர். க. ப. அறவாணன்
தமிழியல் துறைத் தலைவர் புதுவைப் பல்கலைக் கழகம்

குடியேற்ற நாடுகளில் கரிசு (பாவ) எச்சம்: ஐரோப்பாவைச் சேர்ந்த போர்ச்சுகீசு, ஆலந்து. இசுபெயின், இங்கிலாந்து, பிரான்சு ஆகிய ஐந்து சிறு நாடுகள் பல நூறு கல் தொலைவில் உள்ள ஆப்பிரிக்கக் கண்டத்தையும், ஆசியாக் கண்டத்தையும், ஆத்திரேலியாக் கண்டத்தையும், வட அமெரிக்கா—தென் அமெரிக்காக் கண்டங்களையும் அரசியல் அடிமையாக்கின என்பது வரலாறு. கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தொடங்கிய குடியேற்ற (காலனி) வல்லாண்மை 20ஆம் நூற்றாண்டு வரை நிலைத்திருந்தது. இன்னும் சிற்சில நாடுகளில் நீடிக்கிறது. சோவியத்து ஒன்றியத்தில் மாமேதை இலெனின் 1917-இல் நிகழ்த்திய புரட்சியை ஒட்டி உலகத்தின் பல்வேறு நாடுகளில் உரிமைக் கிளர்ச்சிகள் தோன்றின. ஆங்காங்கே ஆளுகின்ற ஐரோப்பியரை அல்லது அதிகாரப் பிரிவை எதிர்த்து நடத்தப்பெறும் விடுதலைப் போர்களுக்கு இலெனின் ஒத்துழைப்பும், ஊக்குவிப்பும் நல்கி வந்தார். 20-ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் சில நாடுகளும், பிற்பாதியில் பல நாடுகளும் தம்மை ஆண்டு வந்த அயலாளுமை விலங்குகளை உடைத்தெறிந்து விட்டு விடுதலை பெற்றன. 1947-இல் இந்தியா விடுதலை பெற்றது. 1954-இல் புதுவை பிரஞ்சு அரசிடம் இருந்து விலகி இந்தியா—தில்லி அரசுடன் இணைந்தது.

அரசியல் பிணைப்புகளை மட்டுமே ஐரோப்பியர்கள் நுண்திறத்தோடும், அறிவுக்கூர்மையோடும் விலக்கிக் கொண்டார்கள். அனைத்து நாடுகளும் குடியேற்ற வல்லாண்மைகளில் இருந்து அரசியல் விடுதலை மட்டும் பெற்றன என்றே சொல்லுதல் வேண்டும். குடியேற்ற ஆட்சிக் காலத்தில் குடியேற்றக்காரர்கள், குடியிருப்பு நாடுகளில் விதைத்து, வளர்த்து, மரமாகச் செழிக்க விட்டுப்போன மொழி அடிமைத்தனம், பண்பாட்டு அடிமைத்தனம், நாகரிக அடிமைத்தனம், பொருளியல் அடிமைத்தனம், குமுகாய அடிமைத்தனம் ஆகியன அப்படியே நின்று நிலை பெற்றன. இதற்குச் சரியான சான்று, இந்தியா—தமிழ்நாடு—புதுவை எனலாம். ஐரோப்பியர்கள் வெளியேறிய பின்பும் அவர்கள் விட்டுச் சென்ற நாகரிகமே வல்லாளுமை செலுத்துகின்றது. அவர்கள் விட்டுச் சென்ற பண்பாடுகளே வல்லாளுமை செலுத்துகின்றன. அவர்கள் விட்டுச் சென்ற பொருளியல் குமுகாய அமைப்புகளே தொடர்ந்து ஆட்சி செலுத்தி வருகின்றன. குடியேற்ற ஆட்சிக் காலத்தில் குடியிருப்பு நாடுகள் குடியேற்ற நாடுகளில் உருவாக்கம் செய்யப்பட்ட பொருள்களை விற்பதற்குரிய சந்தைகளாக விளங்கின. ஐரோப்பிய மொழியில் எழுதப்பட்ட நூல்கள், வெளியிடப்பட்ட ஏடுகள், வெளியிடப்பட்ட திரைப்படங்கள், குடியிருப்பு நாட்டுச் சந்தைகளில் விற்கப்-

பட்டன. ஐரோப்பியர் அறிமுகப்படுத்திய தேநீர், குளம்பி (காபி), வெண்சுருட்டு (சிகரெட்) கோதுமைப் பண்டங்கள் ஆகியனவும் அப்படியே இடம் பிடித்தன. கனடாவில் உருவாக்கப்படும் 'பாட்டா' செருப்பு சென்னையிலும், புதுச்சேரியிலும் விற்பனையாயிற்று; விற்பனையாகிறது. ஐரோப்பிய நாடுகளில் உருவாக்கம் செய்யப்பட்ட பற்பசையான 'கால்கேட்', 'லக்சு' வழலை முதலான ஆடம்பரப் பொருள் வகைகள் அனைத்து நாடுகளின் கூட்டு என்ற பெயரில் இன்றும் தொடர்ந்து இருந்து வருகின்றன. ஆழ்ந்து சொல்லப்போனால் ஐரோப்பியப் பொருளியல் சந்தைகளாகவே இன்னும் பல நாடுகளும் இருந்து வருகின்றன். உருவாக்கம் செய்யும் இடம் இங்கிலாந்து, பாரிசு ஆகிய நகரங்களுக்குப் பகரமாக பம்பாய், கல்கத்தா என்று மாறி இருக்கலாம்.

மொழி வெறும் கருவி மட்டும் அன்று. அதுவே பண்பாட்டு, நாகரிக வளர்ச்சிக்கும், தளர்ச்சிக்கும் அடிப்படையானது. இதை நன்கு அறிந்தவர்கள் ஐரோப்பியர். ஏனைய பொருள்கள் விற்றதைப் போலவே, விற்றுக் கொண்டு இருப்பதைப் போலவே, தம் மொழியையும் இவர்கள் விற்றனர். ஒரு வேறுபாடு: ஒரு பொருளை விற்றபின் அந்தப் பொருள் விற்றவன் கையில் இராது. மொழி அளவில் மட்டும் இது வேறுபட்டுள்ளது. அண்மையில் புதுவைப் பல்கலைக் கழகமும், புதுவை அரசும் இணைந்து நூல் கண்காட்சி ஒன்றை நடத்தின. இந்நூல் கண்காட்சியில் விற்பனையான புத்தகங்களில் பெரும் பங்கு ஆங்கில, பிரஞ்சுப் புத்தகங்கள் ஆகும். மிகச் சிறு பங்குகூடத் தமிழ் நூல்கள் விற்கவில்லை. எனவே, நூல் கண்காட்சியில் பங்கேற்ற தமிழ்ப் பதிப்பாளர்கள் அடுத்தமுறை தாங்கள் நூல் கண்காட்சிக்கு வரப்போவது இல்லை என்று தெரிவித்தனர்.

குடியேற்ற நாடுகளில் கலையொழுக்க எச்சத்துள் தலையாயவை: தமிழ்நாட்டுச் சித்த மருத்துவம் செத்து, ஐரோப்பிய அலோபதி மருத்துவம் செழித்தது. தமிழ்நாட்டு உணவுமுறைகள் அழிந்து ஐரோப்பிய உணவுமுறைகள் இடம் பெற்றன. தமிழ்நாட்டுக் குடிவகைகள் ஐரோப்பிய குடிவகைகளால் விரிந்து பரவின.

விளையாட்டு வல்லாண்மைகள்: தமிழ்நாட்டு விளையாட்டுகள் விடைபெற்று ஐரோப்பிய விளையாட்டுகள் இடம் பெற்றன. இவற்றுள் தலையாயது 'கிரிக்கெட்' எனும் மட்டைப்பந்து விளையாட்டு ஆகும். இவ் விளையாட்டு கி.பி. 1300 வாக்கில் இங்கிலாந்தில் பிறந்து எல்லா நாடுகளுக்கும் ஏற்றுமதி/இறக்குமதி செய்யப்பட்டது. இ'து ஏழைகளின் விளையாட்டு இல்லை. ஆங்கிலேய இளவரசக் குடும்பத்தினர் விளையாடும் விளையாட்டு. அதனால் அது விளையாட்டின் அரசன் (Sports' King) என்று கூட அழைக்கப்படுகிறது. இவ் விளையாட்டு விளையாடத் தேவைப்படும் இடம், கருவிகள், ஆட்கள் ஆகியவற்றை எண்ணிப் பார்த்துத் தமிழ் நாட்டில் தலைமுறை தலைமுறையாக விளையாடப்பட்டுத் தற்-

போது மறக்கப்பட்டு வரும் சடுகுடு விளையாட்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் வேறுபாடு தெரியும். சடுகுடு விளையாட்டிற்கு முதலீடே தேவையில்லை.' சிறிய அளவில் திறந்தவெளி மட்டும் தேவை.

அண்மையில் நடந்து முடிந்த கிரிக்கெட் போட்டிக்குச் செலவான தொகை உருபா. 94 இலக்கங்கள். விளக்கம் வருமாறு:

| | |
|---|---|
| ஆறு நாட்டுக் குழுவினருக்கும் தரப்பட்ட | உருபா. |
| குறைந்தபக்க உறுதித் (கியாரண்டி) தொகை | 16,00,000 |
| 15 தொடக்கக்கட்ட ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளுக்குத் தரப்பட்ட தொகை | 6,00,000 |
| 15 ஆட்டங்களில் விளையாட்டுத் திறவோர்களு-(மேன் ஆப் தி மேட்சு)க்குத் தரப்பட்ட பரிசுத் தொகை | 3,00,000 |
| விளையாட்டு மிகுதிறனுளருக்குப் (மேன் ஆப் தி சீரியசு) பரிசுத் தொகை | 1,00,000 |
| 8 விளையாட்டு நடுவர் (அம்பயர்)களுக்கான செலவுத் தொகை | 4,00,000 |
| அரையிறுதி (செமிஃபைனல்), முழுஇறுதி (ஃபைனல்) ஆட்ட நடுவர் (அம்பயர்)களுக்கான செலவு | 1,00,000 |
| வெற்றி பெற்ற குழுவிற்குப் பரிசுத் தொகை | 8,00,000 |
| அடுத்ததாக வந்து வெற்றி பெற்ற குழுவிற்கு | 5,00,000 |
| அதற்கு அடுத்து வந்த வெற்றிக் குழுவிற்கு | 3,00,000 |
| அதற்கு அடுத்து வந்த வெற்றிக் குழுவிற்கு | 2,00,000 |
| பயணச் செலவு வகை | 25,00,000 |
| உள்ளூர் செலவு வகைகளுக்கு | 20,00,000 |
| | 94,00.000 |

(கல்கண்டு, 30-11-89)

விளையாட்டு என்பது குமுகவியல் பார்வையில் வேண்டாத ஒன்று அன்று. மாந்தன் அடிப்படையில் விலங்கு. அவன் ஒரு குமுக விலங்கு அவ்வளவுதான். மற்றபடி விலங்கு உணர்ச்சிகள் அனைத்தும் அவனிடம் இடம் பெற்றுள்ளன. இது போன்ற விளையாட்டுகள் மாந்த மனத்தில் பொங்கிவரும் விலங்கு உணர்ச்சியையும், பகை உணர்ச்சியையும் தணிக்க உதவுகின்றன. எனவே, குமுகவியல் பார்வையில் விளையாட்டு வேண்டியதே. உடல்நலப் பார்வையிலும் விளையாட்டு வேண்டியதே. குழுநலப் (Team Spirit) பார்வையிலும் விளையாட்டு வேண்டியதே. ஆனால் விளையாட்டு வேறு, விளையாட்டை விளையாடாமல் சுற்றி அமர்ந்து கொண்டு சோம்பேறியாகப் பார்த்துச் சுவைப்பது (இரசிப்பது) வேறு. 'கிரிக்கெட்' விளையாட்டைப் பொறுத்த அளவிற்கு 11-11-22 பேரும், இரண்டு நடுவர்களும், ஆக 24 பேர் அங்குமிங்கும் அசையப், பல்லாயிரக்கணக்கானோர் பார்க்கும் பார்வையாளர்களாகத் தம்மை முழுச்சோம்பேறிகளாக மாற்றிக் கொள்கின்றனர். அதனால் பொன்னாட்சா,

"11 முட்டாள்கள் ஆடும் ஆட்டத்தை 11ஆயிரம் முட்டாள்கள் பார்த்துச் சுவைக்கின்றனர்"

என்று குறிப்பிட்டார். நாம் இங்கே அலசுவதும், ஆராய்வதும் 'கிரிக்கெட்' விளையாட்டை விளையாட வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி அன்று. விளையாட்டை ஒட்டிப் பார்த்துச் சுவைக்-கும் சோம்பேறிக் கூட்டத்தை இந்தியா போன்ற ஏழை நாடு-களில் திட்டமிட்டு வளர்க்க வேண்டுமா என்பது பற்றித்தான்.

அரசின் அரவணைப்பு: அரசமைப்பே 'கிரிக்கெட்' விளை-யாட்டைப் பெரிய அளவில் விளம்பரப்படுத்தி நடத்துகிறது; அல்லது நடத்த உதவுகிறது. 'கிரிக்கெட்' விளையாட்டு நிகழும் போது அரசே விடுமுறை அளிக்கிறது. சான்றாக, 1986ஆம் ஆண்டு இந்தியா—ஆத்திரேலியா அணிகளுக்கு இடையே செப்டம்பர் 18 முதல் 22-ஆம் நாள் வரை சென்னை சேப்பாக்கத்தில் 'கிரிக்கெட்' போட்டி நிகழ்ந்தது. விளையாட்டுத் தொடங்கும் முதல் நாளான 18ஆம் நாளை விடுமுறை நாளாக அரசு அறிவித்தது. இந்தியா பாக்கித்தான் அணிகளுக்கிடையே 1987ஆம் ஆண்டு பிப்ரவரி 3 முதல் 8 வரை சென்னையில் கிரிக்கெட் போட்டி நடந்தது. 3-ஆம் நாளை விடுமுறை நாளாக அரசு அறிவித்தது. அரசு அளிக்கும் விடுமுறை ஒரு நாள் என்றாலும், அவரவர்களாக எடுத்துக் கொள்ளும் விடுமுறை மேலும் பல. 1987ஆம் ஆண்டில் இந்தியா—பாக்கித்தான் அணிகளுக்கிடையே பிப்பிரவரி 3 முதல் 8 வரை நிகழ்ந்த மேற்கண்ட 'கிரிக்கெட்' போட்டியின்போது 120 சிறப்புப் பேருந்துகளை விளையாடும் இடமான சேப்பாக்கம் வரை செல்ல அரசு ஏற்பாடு செய்தது.

தொலைக்காட்சி, வானொலி: மாநில அரசு ஒரு பக்கம் இருக்க, 'கிரிக்கெட்' விளையாட்டைக் கச்சை கட்டி வளர்க்கும் பொறுப்பைத் தொலைக்காட்சியும், வானொலியும் போட்டி போட்டுக் கொண்டு செய்கின்றன, இந்தியாவிற்கு வெளியே அயல் நாடுகளில் நிகழும் 'கிரிக்கெட்' போட்டி ஒன்றை இந்தியா, தொலைக்காட்சி வழி ஒலிபரப்ப அரசுக்கு 20 கோடி உருபாய்க்கு மேல் செலவாகிறது. வானொலியில் ஒரு நொடி நேரம் ஒலி-பரப்பு ஆகும் செலவு உரு. 5 ஆகும். ஒரு மணிக்கு $5 \times 60 \times 60 =$ 18,000 உருபாய் செலவாகிறது. தொலைக்காட்சி ஞாயிறு காலை 11 மணி முதல் 'இதுதான் கிரிக்கெட்' (That is Cricket) எனும் பெயரில் கிழமை தோறும் 'கிரிக்கெட்டைப் பற்றிய வரலாற்றை விரித்துரைத்தது.

இந்தியாவில் 'கிரிக்கெட்' போட்டிகள் நடக்கும் காலம் பெரும்பாலும் திசம்பர் மாதம் ஆகும். திசம்பர் மாதத்தில் கல்லூரி மாணவர்கள் அனைவருக்கும் முதற்பருவ இறுதித் தேர்வு நடக்கும் காலமாகும். பள்ளி, இன்னபிற கல்வி நிறுவனங்-களுக்கு அரையாண்டுத் தேர்வுகள் நடக்கும் காலம் ஆகும். தேர்வு நடந்து கொண்டிருக்கும் அதே சமயத்தில் அல்லது தேர்வு தொடங்குவதற்குச் சில நாள் முன்பு இந்திய அரசின் தொலைக்-

காட்சியும் வானொலியும் காலை முதல் இரவு வரை, இன்னும் சொல்லப் போனால் நள்ளிரவிலும்கூடக் கிரிக்கெட் விளையாட்டை ஒளி/ஒலி பரப்புகின்றன. போதிய பக்குவம் பெறாத இந்திய இளைஞர்கள் தம் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் தேர்வைப் பற்றிக் கவலையுறாமல் தொலைக்காட்சிப் பெட்டி முன் உட்கார்ந்து 'அவன் வென்றான்', 'இவன் வென்றான்' என்று பார்ப்பது அன்றாடக் காட்சிகள். உள்ளூர் நிகழ்ச்சிகள் போதா என்று உலகத்தில் எங்கோ மூலையில் நடக்கும் 'கிரிக்கெட்' விளையாட்டையும் தொலைக்காட்சிகள் நேர்முகமாக அஞ்சல் செய்கின்றன. அண்மையில் இது போன்ற தொடர் ஒளி, ஒலிபரப்புகள் நிகழ்ந்தன; சனவரி 9 முதல் பிப்பிரவரி 9ஆம் நாள் வரை 1986ஆம் ஆண்டில் ஆத்திரேலியாவில் நடந்த விளையாட்டை நம் தொலைக்காட்சி நேர்முக அஞ்சல் செய்தது. சில சமயம் நேர்முக அஞ்சல், இரவு தொடங்கி அதிகாலை வரை நிகழும். அத்தகு சமயங்களில் தொலைக்காட்சி வருணனைகளை இரவில் கண் விழித்துப் பார்த்து விட்டு மாணாக்கர்கள் வகுப்பில் தூங்குவது எங்கும் காணப்படும் காட்சியாகும்.

கோடிக்கணக்கான வீடுகளுக்கு மின்னிணைப்பு இல்லை; இந்தியாவில் பல மாநிலங்களில் ஆண்டிற்கு ஆறு மாதங்கட்கு மேல் மின்வெட்டு; வேளாண்மை, தொழிற்சாலைகள் மின்சாரம் இன்மையால் தொடர்ந்து நலிவு பெற்று வருகின்றன; இந்நிலையில், 'கிரிக்கெட்' பேரரங்கம் முழுதும் மின் விளக்குகளால் ஒளிபாய்ச்சப் பெற்று, இரவு முழுதும் விளையாட்டு...விளையாட்டு! இரவு விளையாடுவோர் பகலில் ஐந்து விண்மீன் (நட்சத்திர) விடுதியில் ஐந்தடுக்கு மெத்தையில் கவிழ்ந்து படுத்துத் தூங்கி விடுவர். ஆனால் கண்விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் சுவைஞர்(இரசிகர்)கள் — பகலில் அலுவலகத்தில் தூங்குவர்; மாணவர்கள் வகுப்பில் தூங்குவர் அல்லது விடுப்பு எடுத்து வீட்டில் உறங்குவர். சம்பளத்தோடு கூடிய தூக்கம்! வேலைக்குப் போனால்தான் சம்பளம்—சாப்பாடு என்றிருக்கும்-அன்றாடங்கள்...? நகரப் பணக்கார மாணவர்களும், அலுவலர்களும் வானொலி வழி அவ்வப்போது செய்தியை அறிந்து கொண்டே இருக்கக் கை வானொலியை வகுப்பிற்கே/அலுவலகத்திற்கே கொணர்ந்து கேட்டுக் கொண்டிருப்பர். பேராசிரியர்கள் சிலரும் இதற்கு நெறிவிலக்கல்லர். வானொலிப் பெட்டி நேர்முக அஞ்சலில் 'கிரிக்கெட்'காரர்கள் 'வீர' வரலாற்றைச் சிற்றூர் தோறும், இல்லந்தோறும் பரப்பும் பங்கைத் தொடர்ந்து செய்து வருகிறது.

'கிரிக்கெட்'காரரைக் கண்டபடி புகழ்வது:

1. அண்மையில் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு. கருணாநிதி சிறிகாந்திற்கு இலவயமாக மூன்று இலக்கம் மதிப்புள்ள வீட்டை வழங்கினார்;

2. 1983ஆம் ஆண்டு பாக்கித்தான் அணி இந்தியாவிற்கு

விளையாட வந்தது. இந்திய அணியின் சார்பாகப் பதினன்கு பெயர்கள் அறிவிக்கப்பட்டன. அவர்களில் இடம்பெறாத 'கிரிக்கெட்'காரர் சந்தீப்படேல் என்பவரை நாகபுரியில் பங்குகொள்வதற்காகப் பம்பாயில் இருந்து நாகபுரிக்கு ஒரு தனி விமானத்தையே அனுப்பி அவரை அழைத்து வந்தது.

3. பத்மபூசன், பத்மசிறி முதலான சீர்ப்பெயர்(விருது)களைக் கிரிக்கெட்காரர்களுக்கு அரசு வாரி வழங்கி வருகிறது.

4. கவாசுகர் என்பவருக்குச் சிதம்பரம் அண்ணமலைப் பல்கலைக்கழகம் 1986 திசம்பர் முதல் நாள் அன்று முனைவர் (டாக்டர்) பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

5. 1980 சனவரியில் தமிழ்நாட்டு அரசின் கருவூலத்தில் இருந்து மக்கள் அளிக்கும் வரிப் பணத்தில் இருந்து—உருபாய் ஐயாயிரத்தைக் கபில்தேவுக்கு வள்ளல் எம். சி. ஆர். வழங்கினர்.

6. 1986இல் செப்டம்பர் 18 முதல் 22 வரை சென்னையில் நடந்த 'கிரிக்கெட்' போட்டியில் ஆளுநர் எசு. எல். குரானு நினைவுப் பரிசை வழங்கினர்.

7. 1986 அக்டோபர் 18 பம்பாயில் இந்திய 'கிரிக்கெட்' ஆளுமைச் சங்கத்தின் தலைவர் திரு. இராமன் 32 வயிரங்கள் பதிக்கப்பட்ட வெள்ளித்தட்டை 'கிரிக்கெட்'காரருக்கு நினைவுப் பரிசாக வழங்கினர்.

8. இவற்ருேடு கூட அரசு இன்னும் சலுகைகள் சிலவற்றைக் 'கிரிக்கெட்'காரர்களுக்குச் செய்கின்றன. மருத்துவம், பொறியியல் முதலான தொழிற்கல்வி பெற ஆயிரக்கணக்கான இளைஞர்கள், தம் மதிப்பெண் சான்றிதழ்களைக் காட்டி இடம் பெறத் துடிக்கின்றனர்; அலைகின்றனர். கிடைப்பதும் இல்லை; ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணும் அரசுகள் கொடுப்பதும் இல்லை. பந்து மட்டையால் நம் பொருளியலை உறிஞ்சி வரும் 'கிரிக்கெட்'காரர்களுக்காக மூன்று...இடங்களை ஆண்டு தோறும் ஒதுக்குகின்றன. 1986-ஆம் ஆண்டு எல். சுப்பிரமணியம் என்ற 'கிரிக்கெட்'காரருக்கு அவர் 'கிரிக்கெட்'காரர் என்பதற்காகவே மதிப்பெண் பெருத் தகுதியைப் புறக்கணித்து விட்டுத் தமிழ்நாடு அரசு இடம் அளித்தது. இம் முறையின்மையை எதிர்த்து அறமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. 1986 திசம்பர் 10-இல் 'கிரிக்கெட்'காரர் சுப்பிரமணியத்திற்கு அளிக்கப்பட்ட இடம் முறையற்றது என அன்றைய நடுவர் திரு. மோகன் அவர்களால் நீக்கம் செய்யப்பட்டது.

*திட்டமிட்ட திசைதிருப்புதல்:* இந் நாட்டின் மக்கள் கொடுக்கும் வரிப்பணத்தை ஏழைப் பிள்ளைகள் படிப்பு அழிந்துபோகும் வண்ணம், அரசு 'கிரிக்கெட்' போன்ற விளையாட்டிற்குத் தலைமை கொடுப்பது நுணுகி ஆராயத் தக்கது. குடியேற்ற (காலனி) ஆட்சிக்காரர்கள் தாங்கள் ஆட்சி செய்யச் செல்லும் நாடுகளில்

வாழும் மக்களுக்குத் தீய பழக்கங்கள் அனைத்தையும் மெல்ல மெல்ல அறிமுகப்படுத்தி அவர்களை அடிமைகளாக மாற்றிவிடுதல் வழக்கம். அயல் நாட்டு மது வகைகளை நம் மக்கள் குடிக்குமாறு செய்தனர். இதற்குச் சரியான சான்று, புதுச்சேரி அரிக்கமேட்டில் கிடைத்த உரோமானியர்களின் மதுக் குடுவைகள் (சாடிகள்); ஐரோப்பியர்கள் வருகைக்குப் பிறகு ஐரோப்பிய மது வகைகளுக்கு இந்திய மக்கள் எளிதாகப் பழக்கப்படுத்தப்பட்டனர்; புகையிலைக்குப் பழக்கப்படுத்தப்பட்டனர்; வெண்சுருட்டு (சிகரெட்டு)க்குப் பழக்கப்படுத்தப்பட்டனர்; திரைப்படம் பார்ப்பதற்குப் பழக்கப்படுத்தப்பட்டனர். தனிப்பரத்தை விடுதிகள் நடத்துவதற்குப் பழக்கப்படுத்தப்பட்டனர்; வெறி (போதை) மருந்து தின்னப் பழக்கப்படுத்தப்பட்டனர். இப் பட்டியலில் 'கிரிக்கெட்' விளையாட்டும் ஒன்றாக இடம் பெறுகிறது. பசிக்காக அழும் குழந்தைக்குத் தாய்ப்பாலும் தர முடியாத—வேண்டிய பண்டங்களை வாங்கித்தர முடியாத—ஏழைத்தாய் வேறுவேறு சாக்குப்போக்குகளையும், விளையாட்டு வேடிக்கைகளையும் காட்டிக் குழந்தையைத் திசை திருப்பி விடுவாள். பசியைக் குழந்தை அப்போதைக்கு மறந்துவிடும். பசியால் வாடும் ஏழைகளை, வேலையின்மையால் வாடும் இளைஞர்களை அரசு, 'கிரிக்கெட்' போன்ற விளையாட்டுகளால் திசை திருப்புகின்றது. எளிய மக்களை வாட்டிக் கொண்டிருக்கும் ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டம், அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறைவிடப் போராட்டம், கொள்ளை அடிக்கும் அரசியல்காரர்களை, அதிகாரிகளை அடையாளம் கண்டு எதிர்க்கும் உரிமை ஆகியவற்றில் இளைஞர் அக்கறை கொள்ளாமல் 'கிரிக்கெட்'டை நோக்கித் திசை திரும்புதல் மூலம் அரசுக்கும், ஆளும் அதிகார இன(வர்க்க)த்திற்கும் நிலையான நன்மைகள் கிட்டுகின்றன. எனவேதான், இளைஞர்கள் தாம் தேர்வில் வெற்றி பெற்றோமா என்பதைவிடக் கவாசுகர், கபில்தேவ் வெற்றி பெற்றனரா என்பதிலேயே அக்கறைக் காட்டச் செய்யப்படுகின்றனர்.

'கிரிக்கெட்' போன்ற விளையாட்டை இந்தியாவில் மட்டுமா நடத்துகிறார்கள், அயல் நாடுகளில் நடத்தவில்லையா என்று வினவலாம். எங்கெங்கு விளையாட்டு உணர்வுக்கு மாறாக வேடிக்கை பார்க்கும் சுவைஞர் (இரசிக) உணர்வு வளர்க்கப்படுகிறதோ, அங்கெல்லாம் திசை திருப்புதல் திட்டமிட்டு நடத்தப்படுகிறது என்பதுதான் பொருள். எனினும், அடிப்படைத் தேவைகளை நிரப்பி ஆடம்பர வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஐரோப்பியர்கள் சில நாட்கள் விடுமுறை விட்டு விளையாட்டை வேடிக்கை பார்க்கக்கூடச் செய்யலாம். ஆனால் 40 கோடி மக்களுக்கு மேல் உணவு இன்றி, உடையின்றி, உறைவிடமின்றித் தவிக்கும் நாட்டில் 50 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் எழுதப் படிக்கத் தெரியாமல் அல்லலுறும் நாட்டில் திசை திருப்புதல்கள் வேண்டுமென்றே திட்டமிட்டே செய்யப் பெறுகின்றன.

ஏடுகள் : நாட்டைச் சுட்டுக் கொண்டிருக்கும் எத்தனையோ செய்திகளை விட்டுவிட்டு நடிகைகளின் கமுக்க (அந்தரங்க) வாழ்க்கைகளைச் சந்தைக்குக் கொண்டுவரும் இந்திய ஏடுகள் திரைப்படச் சுவைக்கு (இரசனைக்கு) அடுத்தபடியாக விளையாட்டுச் சுவையை (இரசனையை) வெகுவேகமாக வளர்த்து வருகின்றன. இதில் அனைத்துலக அனைத்தறிவு மொழியாகக் கருதப்பெறும் ஆங்கில மொழி இதழ்கள் தனி இடம் பெறுகின்றன. இந்து, இன்டியன் எக்சுபிரசு ஆகிய நாளிதழ்கள் நாள் தோறும் சில பக்கங்களையே விளையாட்டிற்காக ஒதுக்குகின்றன. அதனுடன் கிழமை தோறும் துணை இதழ்களை (Supplement) வெளியிடுகின்றன. இவை போதா என்று இந்து நாளிதழ் விளையாட்டு விண்மின் (Sports Star) என்ற தனிக் கிழமை ஏட்டையே நடத்துகிறது. இவை மட்டுமல்லாமல் (Sports World, Sports Week, World of Cricket, Asian Cricketer) முதலான ஏடுகளும் வெளி வந்து கொண்டிருக்கின்றன. அண்மைக் காலத்தில் தினமணி, தினமலர் ஆகிய இதழ்கள் தமிழிலும் இந்த அழிவை (நாசத்தை)ச் செய்வதற்காகச் சில பக்கங்களையே ஒதுக்குகின்றன. இவ் வேடுகளில் இந் நாட்டில் பிறந்த அறிவியல் அறிஞர்களுடைய செய்திகள் வாரா, கல்வி மேதைகளுடைய செய்திகள் வாரா, சிறந்த கலை ஆர்வச் செய்திகள் வாரா. அப்படி வந்தாலும் கூட அவை யார் கண்ணுக்கும் படாத இடத்தில் மிக எளிமையாக வெளியிடப்பட்டிருக்கும். தொழுநோயாளிகளுக்குத் தொண்டு செய்யும் அன்னை தெரேசா சாவின் பிடியில் துடித்துக் கொண்டிருந்த செய்தியை எட்டாவது பக்கம் எட்டாவது களத்து மூலையில் வெளியிட்ட தமிழ் ஏடுகள், கிரிக்கெட்காரனின் வைப்பாட்டிக்கு வயிறு வலிக்கும் செய்தியை முதற் பக்கத்தில் தலைப்புச் செய்தியாக வெளியிடுகின்றன.

'கிரிக்கெட்'க்காரர்களின் கட்டுரைகள், நேர்முகங்கள் அவர் தம் உள்ளறல்கள் ஆகியன நாளிதழில் நாள் தவறாமல் கிழமை தவறாமல் இடம் பெறும். இலக்கியத்திற்கோ, அறிவியலுக்கோ, இன்னபிற அறிவைச் சார்ந்த வாழ்வியல்களுக்கோ தனிக் கிழமை ஏடு இல்லாத இந்தியத் திருநாட்டில் விளையாட்டுக்கு என்று எத்தனைக் கிழமை இதழ்கள்? இந்த விளையாட்டு இதழ்களில் கூட விளையாட்டுப் பற்றிய செய்திகள் ஒரு பக்கம் இருக்க, 'கிரிக்கெட்' காரர்களின் காமச் செய்திகள், திருமணச் செய்திகள், குடித்துக் கூத்தியாளுடன் ஆடிய ஆட்டங்கள் முதலாயின கட்டம் கட்டி வெளியிடப் பெறுகின்றன. சான்றாக, விவியன் ரிச்சர்டு என்பவர் மேற்கு இந்தியத் தீவான ஆண்டிகுவாவில் நடந்த 'கிரிக்கெட்' போட்டியில் 58 பந்துகளில் நூறு ஓட்டம் (சதம்) எடுத்துப் புகழ் பெற்றார். அப்போது நம் ஏடுகள் வழங்கிய செய்தி குமுகாய அக்கறை உள்ள எவனுக்கும் அதிர்ச்சி தருவதாகும்:

> 'விவியன் ரிச்சர்டு தாம் விளையாட வருவதற்கு முன்பு ஒரு கோப்பை 'பீர்' அருந்தினார். எனவே. எல்லாப் பந்துகளையும் கண்டபடி விலாசித் தள்ளினார்'

விளையாட்டுக் காரர்களையும், திரைப்பட நடிகைகளையும் இணைத்-துக் கதைகள் கட்டித் தம் ஏடுகளில் விற்பனையைப் பெருக்குவது ஒருமுறை. பட்டொடி—சர்மிளா, சோபர்ட்சு—அஞ்சு, கபில்-தேவ்—சரிகா, இம்ரான்கான்—சீனத் அமன், மோசின்கான்—ரீனராய், இரவிசாசுத்திரி-அம்ரிதாசிங் ஆகிய காமுகர் பற்றி ஏடு-கள் பரப்பிவிட்ட கிசுகிசுக்களில் பட்டொடி—சர்மிளா, மோசின்-கான்—ரீனராய் காமம் திருமணத்தில் முடிந்தது. மற்றவை கிசுகிசுக்களோடு—அஃதாவது களவுப் புணர்ச்சியோடு நின்று-விட்டன. (கண்ணகியும், அகலிகையும், அருந்ததியும் பிறந்த நாடல்லவா?). இரவிசாசுத்திரி-அம்ரிதாசிங் இணைக்குத் திருமணம் முடிந்து குழந்தை பெறும் வரை, ஏடுகள் சுவனித்து எழுதின; மக்களிடையே உணர்ச்சியைப் பெருக்கின. தம் சொந்த வாழ்க்-கையில் கற்பைப் பற்றி உரக்கக் கத்தும் இந்திய/தமிழ் இனம், திரைப்பட நடிக, நடிகைகள், விளையாட்டுக்காரர்கள் ஆகியோரி கற்பைப் புறக்கணிப்பதையே பாராட்டித் தாளிகைகள் தொடர்ந்து எழுதித் தள்ளுகின்றன. இரவிசாசுத்திரி 'கிரிக்கெட்' விண்மீன் (நட்சத்திரங்)களின் 'காதல் மன்னன்' என்று இதழ்-களால் புகழப் பெறுகிறார். நியூயார்க்கில் இரவிசாசுத்திரியும் அம்ரிதாசிங்கும் இணைந்து இருந்தது நம் நாட்டுச் செய்தியாளர்க-ளால் கண்டுபிடிக்கப்பட்டது; உடனுக்குடன் ஏடுகளில் விளம்-பரப்படுத்தப்பட்டது. பாக்கித்தான்காரர் மோசின்கான் தேர்வு செய்யப்படாததற்குக் காரணம் அவர் இந்திய நடிகை ரீனரா-யைத் திருமணம் செய்து கொண்டதுதான். திரைப்பட நடிக, நடிகையர்கள் பற்றி அருவருப்பு(ஆபாசங்)களைப் பரப்புவதில் ஏடுகள் எவ்வாறு முதன்மை பெறுகின்றனவோ, அதைப் போலவே விளையாட்டுக்காரர்களின் மறைமுக(அந்தரங்க)ங்களை, அருவருப்பு (ஆபாச) வாழ்க்கையை ஏடுகள் முதல் நிலை ஆக்கு-கின்றன. சிற்சில சமயங்களில் சிறப்பு விளையாட்டு இதழ்களும் வெளியிடப் பெறுகின்றன. 'இதயம் பேசுகிறது' என்ற ஏடு 8—2—87இல் 'கிரிக்கெட்' சிறப்பிதழ் என்றே தனியாக வெளி-யிட்டது. இன்னும் எத்தனையோ?

'கிரிக்கெட்' பற்றி வெளிவரும் புத்தகங்கள்: அறிஞர்கள் அரும்பாடுபட்டு எழுதி வெளியிடும் நூல் 600 அல்லது 1000 வரை தான் பொதுவாக அச்சிடப்பெறும். குமுகாய அக்கறையுள்ள—குமுகாயத் தேவையுள்ள எந்த நூலும் தமிழ் வாசகர்களிடையே விற்பனையாக மூன்று ஆண்டுகள் அல்லது ஐந்து ஆண்டுகள் வரை ஆகும். சிலவற்றிற்கு நூற்றாண்டு கூட ஆகும். ஆனால் விளை-யாட்டுக்காரர்கள் சொந்தமாகவோ அல்லது மற்றவர்கள் எழுதிக் கொடுத்தோ வெளியிடும் புத்தகங்கள் (உளறல்கள்) ஆயிரக்கணக்கில் விற்பனையாகின்றன. சான்றாக, கவாசுகர் எழுதிய கதிரவ நாள்கள் (Sunny Days) என்ற பொத்தகம் ஐம்பதாயிரத்திற்குமேல் விற்பனையாயிற்று. அவருடைய இடோல்சு (Idols) என்ற புத்தகம் இலக்கத்தை எட்டியது. கபில்தேவ் தம்முடைய வரலாற்றை எழுதியே இலக்கக் கணக்கில்

சம்பாதித்து உள்ளார். தற்போது (24—11—1989) தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் வேட்பாளராக நின்ற (தோற்ற) மாநிலக் காவல் அதிகாரி முன்னுள் (போலிசு ஐ. ஜி.) திரு. இராதாகிருட்டிணன் 'கிரிக்கெட்' பற்றி நூல் எழுதியுள்ளார். 'கிரிக்கெட்டைப் பற்றிய பல நூல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளிவந்துள்ளன. இதில் பெருத்த அவலம், கல்லூரி அல்லது பள்ளிக்குப் படிக்க வந்திருக்கும் மாணுக்கர்கள் பெற்ருேரிடம் இருந்து பாடப் புத்தகத்திற்காகப் பெற்று வந்த பணத்தைக் கவாசுகர், கபில்தேவ் எழுதிய புத்தகங்களை வாங்குவதற்குச் செலவழிப்பதுதான்! படிக்காத பெற்ருேருக்கு எந்தப் புத்தகம், யார் எழுதிய புத்தகம் என்று தெரியவா போகிறது? கலைமகள் (சரசுவதி) பூசை செய்வதிலேயே தமிழ்த் தாய்மார்களின் பொழுது போய்விடுகிறது!

விளம்பரம்: தொலைக்காட்சி, வானெலி, ஏடுகள் ஆகியவற்றைக் கவனிப்போர் அண்மைக் காலமாக விளையாட்டுக்காரர்கள் விளம்பரங்களில் இடம் பெறுவதைப் பார்த்திருப்பீர்கள். குறிப்பிட்ட 'கிரிக்கெட்'காரர் பயன்படுத்தும் பற்பசை, வழலை (சோப்பு), உடை, காலணிகள், மின்கலங்கள் (பாட்டரிகள்), ஊர்திகள் (வாகனங்கள்) முதலாயவற்றைக் கிரிக்கெட்'காரர் பயன்படுத்துவதாக விளம்பரம்:

ஒரு விளம்பரத்தில் தமிழும் இடம் பெற்று இருக்கிறது. ஒரு நண்பன் தமிழ்ப் பாடம் படித்துக் கொண்டிருக்கிருன். இன்னெருநண்பன் அவனை விளையாடக் கூப்பிடுகிருன்.

> பொத்தகத்தைத் தூர எறி. 'கிரிக்கெட்' நன்ருக
> விளையாட வேண்டுமென்ருல் தமிழ் நன்ருகத்
> தெரியக் கூடாது'

'நெசுகபே' விற்பனைக்காக இரவிசாத்திரி என்பவர் கூறுவதாக (உளறுவதாக) வரும் விளம்பர உரை கவனத்திற்கு உரியது:

> 'எனக்குத் தமிழ் நல்லா வராது. ஆனுல் காபியைப்
> பற்றி நல்லா தெரியும்'

ஏழைக் 'கிரிக்கெட்'காரர்கள் வருமானம்: 'கிரிக்கெட்'காரர்களுக்குக் கிடைக்கும் வருமானம், புகழ் ஆகியன இந்தியாவில் உள்ள பொதுமக்களுக்குக் கிடைக்குமா என்பது முழுக்க முழுக்க ஐயமே. அண்மையில் பாக்கித்தானில் ஆடுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட இந்தியக் 'கிரிக்கெட்'காரர்கள் தமக்குக் கொடுத்த பணம் போதாது என்று போராடியது இதழ்களில் வெளிவந்தது.

'அதிகச்சம்பளம் தராவிட்டால் 'கிரிக்கெட்' விளையாட மாட்டோம்: 'கிரிக்கெட்' வீரர்களின் சம்பளத்தைக் கிரிக்கெட் விளையாட்டு நிறுவனம் (போர்டு) உயர்த்த வேண்டும். அஃதாவது பாக்கித்தான் செல்லும் வீரர்களுக்கு 60 ஆயிரம் உருப்பாய் சம்பளம் வழங்கப்படுகிறது. இதை ஓர் இலக்கத்து 2 ஆயிரம் உருபாவாக அதிகரிக்க வேண்டுமாம்.

இது தவிர வீரர்களைப் போட்டி (டெஸ்ட்) மற்றும் ஒருநாள் ஆட்டங்கள் விளையாடி உள்ள பட்டறிவுக்கு (அனுபவத்துக்கு) ஏற்பத் தரம் பிரித்து, மூத்த வீரர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டுமாம். மேலும் வீரர்களுக்கான படித் (அலவன்சு) தொகையையும் அதிகரிக்க வேண்டுமாம்.

வீரர்களின் இந்தக் கோரிக்கைகளின்படி கபில்தேவ் அதிக அளவு சம்பளம் பெறுவார். அவருக்குச் சுற்றுப்பயணச் சம்பளமாக ஓர் இலக்கத்து 2 ஆயிரம் உருபாயும், மூத்த வீரர் என்கிற அடிப்படையில் மேலும் ஓர் இலக்கத்து 80 ஆயிரம் உருபாயும் வழங்கப்பட வேண்டும்.

இது தவிர அவருக்குப் படியாக (அலவன்சாக) 2 ஆயிரத்து 760 டாலர் (சுமார் 44 ஆயிரம் உருபாய்) அளிக்க வேண்டும்.

(தினத்தந்தி, 8—11—89)

1983-ஆம் ஆண்டில் இந்தியக் 'கிரிக்கெட்' அணி உலகக் கோப்பையை வென்றபோது ஒவ்வொருவருக்கும் ரூபாய் ஐந்து இலக்கம் கூடுதல் தொகையாகக் கிடைத்தது. 1960-இல் 'கிரிக்கெட்'காரர் ஒருவருக்கு உரு. 750 கொடுக்கப்பட்டது? இன்று உரு. 17,500 கொடுக்கப்படுகிறது. ஒருநாள் போட்டி விளையாடினால் உரு. 5,000 கொடுக்கப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், வேறு எந்த வேலையும் செய்யாமல் கிரிக்கெட்காரர் ஒருவர் ஆண்டு ஒன்றுக்கு உரு. 2,50,000க்கு மேல் ஈட்ட முடியும். கவாசுகருக்கு நிர்லான் என்ற குழுமம் ஓர் ஆண்டிற்கு உருபாய் ஓர் இலக்கத்துப் பதினையாயிரம் வழங்குகிறது. போட்டியில் வெற்றி பெறாமல் தோற்றாலும் பணம் கிடைக்கும். தோற்றதற்கு உரு. 25,000. வெற்றிபெற்ற கிரிக்கெட்காரர் விளம்பரத்தில் தலையைக் காட்டினாரேயானால் அவருக்கு அளிக்கப்படும் தொகை உரு. 15,000. ஏதேனும் ஏடுகளில் 'கிரிக்கெட்'காரர்கள் 800 சொற்கள் உளறியிருந்தால் அதற்கு அவருக்கு அளிக்கப்படும் தொகை உரு. 1000. (நமக்கு: அவர்கள் வெளியிட்டால் அதுவே பெரிய ஊதியம்); 1983-ஆம் ஆண்டில் உலகக் கோப்பையை வென்ற இந்திய அணித் தலைவர் கபில்தேவ், அவ்வாண்டில் மட்டும் 50 இலக்கம் சம்பளம் பெற்றார்; வெற்றி பெறுகிறபோது மேலும் பல பரிசுகளும் ஒருவருக்குக் கிடைக்கின்றன. 1983 திசம்பர் 26 முதல் 29 வரை சென்னை சேப்பாக்கத்தில் மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிராக நடந்த போட்டியில் கவாசுகர் 236 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார். உலகக் 'கிரிக்கெட்' வரலாற்றில் அதிக நூறு(சதம்)அடித்தவர் என்கிற பெயரையும் பெற்றார். அதற்காக அவர் பெற்ற பரிசுகள்: 11

| | |
|---|---|
| சிறந்த ஆட்டக்காரர் சீர்ப்பெயர்(விருது) | : உரு. 15,000 |
| பின்னி குழுமம் அளித்த பரிசு | : உரு. 10.000 |
| எர்பர்ட் சன்சு லிமிடெட் பரிசு | : உரு. 5,000 |
| 'கிரிக்கெட்' சங்கப் பரிசு | : உரு. 10,001 |

மாருதி இயங்கி (கார்) : உரு, ஓர் இலக்கத்திற்குமேல்

மொத்தம் : ஒன்றரை இலக்கம் (கிட்டத்தட்ட)

1985 ஆத்திரேலியாவில் நடைபெற்ற போட்டியில் இரவி-சாசுத்திரி சிறந்த ஆட்டக்காரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்காக அவருக்கு 'ஆடி 100' என்ற இயங்கி (கார்) பரிசாக வழங்கப் பெற்றது. அந்த இயங்கியின் மதிப்பு 40,000 தாலர்கள். (அஃதாவது ஆறு இலக்கம் உருபா) அந்த இயங்கியை ஆத்தி-ரேலியாவில் இருந்து இந்தியாவிற்குக் கொண்டுவர நம் பா...ரத அரசு தனிக் கப்பல் ஒன்றையே அதற்காக ஏற்பாடு செய்தது. இலவயப் பயணம் செய்து வந்த அதற்கு எந்த வரியும் இல்லாமல் தள்ளுபடி செய்யப்பட்டது; (ஏழையின் ஊர்தி (வாகனம்) அல்லவா?). (கப்பல் செலவு எவ்வளவோ?)

தலைமை வழிபாடு: விளையாட்டைப் பார்த்து விளையாட்டு ஆர்வம் வரலாம். அதைப் பற்றிய கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் விளையாட்டைப் பார்த்துச் சோம்பேறித்தனம் வளர்க்கப்-படுவது கொடுமையிலும் கொடுமை. அதனினும் கொடுமை, தலைமை வழிபாடு இதன் மூலம் வளர்க்கப் பெறுகிறது. கண்ணை மூடிக் கொண்டு 'கிரிக்கெட்'காரர்களை வணங்கி வழிபடும் போக்கு கற்கும் இளைஞர்களிடையே பரவியுள்ளது. அவர் என்ன பற்பசையைப் பயன்படுத்துகிறார், அவர் என்ன பல்துாரிகை (பிரஷ்) பயன்படுத்துகிறார் என்று பார்த்துப் பயன்படுத்தும் இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர். வெங்சர்க்கார் என்கிற கிரிக்கெட்காரர் தாம் விளையாடிய மட்டையை ஏலத்-திற்குப் போட்டு அதிலிருந்து வந்த தொகையைக் கொண்டு ஓர் அறக்கட்டளையையே நிறுவிவிட்டார். கண்மூடி வழிபாடு திட்ட-மிட்டு வளர்க்கப்படுகிறது. இந்தியாவில் சிறந்தவர்கள் என்ற கணக்கு எடுப்பு நிகழும்போது, அக் கணக்கெடுப்பில் அறிவியல் அறிஞர்கள் யாரும் இடம் பெற்றது இல்லை. மாருகக், கவாசுகர் முதலாவதாகவும், கபில்தேவ் இரண்டாவதாகவும், இரவி-சாசுத்திரி எட்டாவதாகவும் தெரிவு செய்யப் பெற்றனர்; பெறு-கின்றனர். தலைமை வழிபாடு வளர்க்கப் பெற்றதால் விளையும் பெரும் தீங்கு, மாந்தக் குலத்தில் முளைத்துக் கொண்டிருக்கும் தன்னம்பிக்கைச் சிறகுகளை வெட்டிவிடுவதாகும். சில சமயம் தனக்கு விருப்பமான ஒருவர் வெற்றி பெறாவிட்டால் எதையோ இழந்தது போன்று துடிக்கும் இளைஞர்கள் ஏராளம். கிரிக்கெட் விளையாட்டை விரும்பும் இளைஞர்கள் 'கிரிக்கெட்' விளையாட்டு நிகழும்போது சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். காலப்போக்கில் 'கிரிக்கெட்' போட்டி நிகழாத நாட்களில் எதையோ இழந்தது போன்ற நிலைக்கு ஆளாகிறார்கள். 'கிரிக்கெட்' விளையாட்டைப் பார்ப்பதற்கு விடுமுறை எடுக்கத் தயங்குவதும் இல்லை. கபில்-தேவிற்குத் திருமணம் நிகழ்ந்தபோது கல்லூரித் தமிழ்க் கண்ணகியர் பலர், அவலமே உருவமாக ஆகிப்போயினர்; கபில்-தேவிற்குச் சென்னைக்(தமிழ் நாட்டின் தலைநகர்!)கல்லூரி மாணவி

ஒருத்தி தன் அரத்தத்தால் கண்ணீர்க் கடிதம் எழுதியிருந்தார். 1987-இல் கவாசுகர்—ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். ''போட்டிப் பந்தயங்களில் இருந்து விலகுவேன்''—என்றார். ஐயோ! ஐயோ! தமிழர்களுக்கு இத்துயரச் செய்தி கேட்கப் பொறுக்கவில்லை. சென்னை, பெரம்பூரைச் சார்ந்த 25 கல்லூரி மாணவர்கள் கவாசுகர் தொடர்ந்து விளையாட வேண்டும் எனத் தம் அரத்தத்தால் ஒவ்வொருவரும் விண்ணப்பித்துக் கொண்டனர். கவாசுகர் மறுத்திருந்தால், இவ் வீரத் தமிழர்கள் தற்கொலை செய்திருக்கக் கூடும்! நல்ல வேளை: மீண்டும் கவாசுகர் களத்தில் குதிக்க முடிவு செய்தார். இம்முடிவை அவர் மட்டும் செய்யாது போயிருந்தால்—நமக்குச் சோறு கிடைக்காமல் போயிருக்கும். பெரம்பூர்த் தமிழர்கள் நம்மைத் தடுத்தாட்கொண்டார்கள்.

எந்த அளவிற்குக் 'கிரிக்கெட்' விளையாட்டு, 'போதை'யாகி ஒருவனை அல்ல ஓர் இனத்தையே கெடுக்கிறது என்பதற்குச் சரியான சாட்சி 1985-ஆம் ஆண்டு ஈழத்தில் இனக் கலவரம் ஏற்பட்டபோது நிகழ்ந்தது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப் பெற்றனர். இலக்கக்கணக்கானோர் ஈழத்தில் உள்ள தமிழர்கள் தமிழகக் கடற்கரையில் உயிரோடும், உயிரற்றும் ஒதுங்கினர். ஈழம் பற்றி எரிந்து கொண்டிருந்தது. அதே சமயத்தில் 1985 ஆகத்து 21 முதல் செப்டம்பர் 22 வரை கிரிக்கெட் ஆடுவதற்காக ஒரு குழு இந்தியாவில் இருந்து இலங்கை சென்றது. இதனைவிடத் தன் இனத் துன்பத்தை அறிய முடியாத அளவிற்கு மக்களை மறக்க அடிக்கச் செய்வதில் 'கிரிக்கெட்' போன்ற விளையாட்டு முன்னிடம் பெறுகிறது என்பதற்கு வேறு சான்று இருக்க முடியாது.

நன்றியுரை : திரு. எசு. சந்திரமௌலி என்னும் வேதியியல் இரண்டாம் ஆண்டு இலயோலா கல்லூரி மாணாக்கர் தம் பகுதி 1, மொழிப் பாடத்திற்கு என் வழிப்படுத்தலில் ''இன்றைய சென்னை கல்லூரி மாணவர்களிடத்துக் கிரிக்கெட்டின் தாக்கம்'' எனும் தலைப்பில் (23—3—87) ஓர் ஆய்வேடு வழங்கினார். என் கட்டுரை, அவர் தம் ஆய்வேட்டிலிருந்து சில தரவுகளைப் பெற்றுள்ளது.

06—12—1989 அன்று தமிழியல் துறை நடத்திய அறிவரங்கத்தில் படிக்க பெற்ற கட்டுரை.

---

**அன்பர்கள் கவனிக்க!**

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்

# நமக்கு உறுதுணையாவது தமிழ் ஒன்றே!

இன்றைக்கு இவ்வுலகின் மாந்தவினத்தில் நாம் ஒவ்வொருவரும் தனித்தனி உயிரிகள்! இப்படி நாம் மாந்தராக வளர்ந்து நிற்பதற்கு முன்னர் என்னென்ன வடிவங்களில் உயிரிகளாகப் படிப்படியாக மலர்ச்சியும் வளர்ச்சியும் பெற்று வந்துள்ளோம் என்பதை உயிரியலாரும் (Biologists) மாந்தரியலாரும் (Anthropologists) பல்வேறு கோணங்களில் திரிபாக்கக் கொள்கையின் முறையுண்மைகளாகத் தெளிவுறவும் வலிவுறவும் நிலை நிறுத்தியுள்ளனர்,

முன் தொடக்கத்தில் ஒற்றைப்புரையன் (One Cellular object) தோன்றியது! அடுத்து, மிகச் சிறிய நுண்ணுயிரி-வகை தோன்றின! அடுத்த படிநிலையில் புல்லிய புழு-வகை உயிரிகள் தோன்றின! பிறகு, பல வகையினவான பூச்சிகள்—பறவைகள்—ஊர்ந்து செல்லும் உயிரிகள் தோன்றின! ஊர்வன வகையினின்று அணில்-எலிகள் போலும் உயிரிகள் தோற்றங் கொண்டன! அவ்வகை உயிரிகளினின்று தேவாங்கு போன்ற குரக்கின முதலுயிரிகள் (Lemurs) பிறந்தன! தேவாங்கு-சிறுவகைக் குரங்கு-குரங்கு முதலியன படிப்படியாக வளர்வுற்றன!

குரங்கு (Monkey) தன் வளர்ச்சிப்பேற்றில் வால் தேய்வுறல் கொண்டு படிப்படியே வாலில்லாக் குரங்கு வகையாகத் (Ape) தோற்றமாற்றம் பெற்று அலைந்தது! வாலில்லாக் குரங்கு வகைஎண்ண வளர்ச்சியுற்றுக் கடுமையான கொட்டைகளை உடைத்து உட்பருப்புத் தோண்டித் தின்னும் திறம் பெற்று-நெற்றுடைப்பான் குரங்கு (Nut cracker man (or) Sinjathropose Boisi)என்னும் பெயரியதாக வளர்ச்சிப்பேறு உற்றது! அந் நிலையினும் அது படிப்படியாக வளர்ச்சியுற்று ஓரளவுக்கு நிமிர்ந்து நிற்கவும் நன்கு நடக்கவும் பயின்று நிமிர்ந்த குரக்கு மாந்தன் (Pithecanthropos erectus) என்னும் நிலைக்கு உயர்ந்தது! [இங்கு மேற்குறிப்பிட்ட வாலில்லாக் குரங்கும்-நெற்றுடைப்பான் குரங்கும்-நிமிர்ந்த குரக்கு மாந்தனும் மாந்த உருவத்துக்கு மிக அண்மைப்பட்டு நிற்கும் தோற்றத்தால், மாந்நற்போலி (Anthropoid) என்றவாறு உயிரியியலார் சுட்டுவர்,]

இந்"நிமிர்ந்த குரக்கு மாந்தன்" இறுதி நிலைப்பட்டு வளர்ச்சி யெய்திய வடிவமே இன்றைய மாந்தன்! [அதாவது-நீங்களும் நானும் பிறரும் ஆகிய நாம் அனைவரும்!...]

இந் நிமிர்ந்த குரக்கு மாந்தன் இன வகைக்கு அடுத்த சாதி வகையார் நாம்! ஆம்!... குரங்குச் சாதியினின்று வளர்ந்து மாந்தச் சாதியானவர்கள் நாம்!

இப்படி, நாம் ஒற்றைப் புரையனிலிருந்து மாந்தராகப் படிநிலை வளர்ச்சியில் வளர்ந்து வடிவெய்தி நிற்கும் இவ்வுண்மையை-அறிஞர் தார்வின் போன்றோர் விண்டு விளக்கிய இம் மெய் வர

லாற்றை எங்குச் சென்று எப்படித் தெளிவாகக் கண்டு உணர-வியலும்? ஆம்-இது இயலுவதே!

தாய்மைப் பேறுற்ற பிள்ளைத் தாய்ச்சி ஒருத்தியின் வயிற்ற-கத்துக் கருப்பையினுள் உள்ள கருத்தங்கல் நிலைத்தோற்றத்-தினின்று, ஒரு கிழமையில்-ஒரு திங்களில்-இரு திங்களில்-முத்திங்-களில்-அறு திங்களில்-எண்டிங்களில்-பத்துத் திங்களில் அல்லது ஒவ்வொரு நாள் முறையிலாகப் படிப்படியே தொடர்ந்து நேரில் முடிவு வளர்ச்சிவரை காணும் வாய்ப்பு நமக்கு நேருமாயின்.-நாமே இவ்வுண்மையின் தெளிவை நன்கு அறியவும் உணரவும் இயலும்!

இதற்குப் பகரமாக-இன்றைய மருத்துவ ஆராய்ச்சி நிலையங்-களின் காட்சிக் கூடங்களில்-கருவுருத் தொடங்கி, ஒவ்வொரு சிறுசிறு காலத்து வளர்ச்சிக் கூறுகளிலான அக்கருவுருவின் வளர்ச்-சிப் படிநிலைகளை-அதனின் நுண்ணுயிரியன்ன தோற்ற நிலையை-அதனின் புழுத் தோற்ற நிலையை-அதனின் எலிக்குஞ்சுபோலும் தோற்ற நிலையை-அதனின் நுண்குரங்கு போன்ற தோற்ற நிலையை-இறுதியில் அதனின் மாந்தப்பிஞ்சு வடிவமாகி நிற்கும் எழில் தோற்ற நிலையைத்-தனித் தனியான ஆடிப் புட்டில்களில் (glass-bottles) மருந்துநீர்மம் நிறைத்து அவற்றைக் கால நிரல்படி உள்ளடைத்து மருத்துவ இயலார் காட்சிப் படுத்தியிருப்பதை நாம் உற்று நோக்குவோமேயானால்-இத் திரிபாக்கக் கொள்கை (Evolution theory)யில் உள்ள உண்மைகளின் உறுதியை நாம் தெளிவாக உணரலாகும்.

உயிர்த் தோற்ற வரிசையில் உள்ள படிப்படியான வளர்ச்சி-களை அவற்றின் மெய்த் திரிபாக்க உண்மைகளைக் கண்ணுடிப் புட்டில்கள் தரும் காட்சியாலேயே தெளிய முடிவதைப் போன்றே-நம்மாலும் நம் மொழியைத் துருவி ஆராய்கையில்,-இருக்கின்ற சொல்வடிவங்களும் அதனின்று கிளைத்தெழுந்த இனச் சொல் வடிவங்களும் தம்மைத் துலக்கிக் காட்டும் காட்சிகளிடையே அவற்றின் கருத் தோற்றங்களையும் செவ்விதின் காண இயல்-கின்றது!

சொற்களின் வடிவங்களே அவற்றின் முந்தியன்ற தொல் பழங்காலப் பயன்பாட்டு நிலைகளையும் விளக்குகின்றன! தமிழ் ஓர் இயற்கை மொழியாகப் பல்லாயிரமாண்டுகளாக வளர்ச்சியுற்று வந்திருக்கின்ற உண்மைகள் சொல்லமைப்புகளிலேயே துலங்க ஒளிர்கின்றன! இதன் இயல்பொழுங்குகள்-படிநிலை வளர்ச்சிகள் பிற மொழிகளில் கட்டாயமாக இவ்வண்ணங் காணவியலாதன!

இத் தமிழ்ச் சொற்கள்-உலக மக்களின் கருத்துப் பரிமாற்றங்-களுக்கெனக் கொடுத்திருக்கின்ற கொடை மிகப் பெரியது! மிகப் பரந்தது! மிக நெடுங்காலமாகத் தொடர்ந்து வந்த வரலாற்றை-யும் உடையது!

மானமற்ற, போர்க்குணமற்ற, தந்நலங்கெட்ட, சிந்தனை கெட்ட நம்மின் பல்வகைக் கீழ்மைப் போக்குகளால்-நாம் நம்-

மையே ஒடுக்கிக் கொண்டோம்! நம்மவரையே தாழ்த்தி நின்ருேம்! நம்மவற்றையே புறக்கணித்துத் தவிர்த்துப் புதைகுழியிலிட்டு வந்தோம்! நமக்குள்ளயே உட்பகைத்தோம்! நம்மவரையே நசித்தோம்! நம்மையே காட்டிக் கொடுத்தோம்! நாமே படிப்படியே கெட்டு வந்தோம்! கெட்டுக் கொண்டும் வருகின்ருேம்!

நாம் நம்மை மீட்டுக் கொள்ள இவ்வுலகிலேயே இன்றைக்கிருக்கும் திறஞ்செறிந்த மீட்புக் கருவி, தமிழ்தான்! நம்மிடம் இருக்கும் இழி நிலைகளைத் தகர்த்தெறியவல்ல நல்ல படைக் கருவியே, தமிழ் ஒன்றுதான்! நம்மிடமுள்ள பூசல் புரைகளைத் தூரத் தள்ளிவிட்டு நம்மையே நாம் ஒன்றிணைத்துக் கொள்ள நம்மிடமிருக்கும் உயிர்ப்பு சான்ற இணைப்பாற்றல் மூலம்-தமிழ் மட்டுந்தான்! நம்மை மீட்கவும்-காக்கவும்-உயர்த்தவும் நம்மிடம் தமிழ் என்ற ஒன்றே இன்று நின்றுள்ளது!

இத் தமிழின் சிறப்பியல்புகள் யாவும் நம் மக்கள் முன் விளக்கமாகப் பட்டியலிடப் பெறவேண்டும்! அதற்குத் தமிழ் அறிஞருலகம் தன்மானத்தொடும்-தம் இன மக்கள் என்ற பாசவுணர்வொடும்-பல்வேறு நிலைகளில் புதைவுற்றுக் கிடக்கும் நம்மின் மொழி பற்றிய மெய்க் கூறுகளை வெளிக் கொணர்தற்கென உழைப்பெடுக்க வேண்டும்! அதனை நம்மவர் உணருமாறு அனைத்திடங்களிலும் உரக்க உரைக்க வேண்டும்! அறிவும் உணர்வும் வாய்ந்த உண்மையாளர் யாவரும் இதற்கெனத் தத்தம்மின் கடன்களையும் பங்குகளையும் தந்தாக வேண்டும்!

நம் முந்தையோரின் ஆற்றலும் அறிவும் தமிழில் நன்கு படிவெய்தியுள்ளன! அவர்களின் வாழ்வியல் போக்குகள்-நோக்குகள்-சீர்மைகள்-சிறப்புகள் யாவும் அவர்கள் உருவாக்கிய சொற்களின் அத்துணை ஒலிவெளிப்பாடுகளின் தெளிவு சுளிவுகளிலுங் கூட ஆழப் பதிந்துள்ளன!

—சொல்லாய்வறிஞர் ப. அருளி
நூல் 'பெற்ருேரைப் பற்றி'

---

இளையோர், முதியோர் அனைவரும் கட்டாயம்
படிக்க வேண்டிய பாலியல் நூல்!

முதுமையில் இளமை

(ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்)

ஆசிரியர், மருத்துவர்
கோ. கோவிந்தன்

பக்கம் 120 விலை உருபா 15

தென்மொழியில் தொடர்ந்து வெளிவந்த
அரிய, ஆராய்ச்சி நூல்!
கிடைக்குமிடம்

கோ. கோவிந்தன், 13, பார்த்தசாரதிபுரம் விரிவு
தி. நகர்- சென்னை-17

அனைத்துலகத் தமிழரெல்லாம் நான்,நீ யென வரவேற்று வணங்கும் நாள் வந்திட்டது: நற்றமிழ் நங்கையே, நீ நடம் பயில்வாய் தமிழர் நெஞ்சில்!

○ : 1396 : தங்களின் நலன் ஆர்வமுடன் நாடுகின்றோம்: 'தென்மொழி' இதழ் 'தேன்மொழி'யாய் எம்மை வந்தடைகிறது: தங்களின் அரிய, சீரிய தொண்டுக்கு எம் உளங்கனிந்த பாராட்டுகள். தங்களுக்கும், தங்களின் குழுவினர்க்கும் எம் அன்புநிறை கிறித்துப்பிறப்புப், புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

அன்புடன்

ஆசிரியர், 'அரும்பு', சென்னை-10

○ : 1397 : அன்புள்ள பாவலரேறு அவர்களுக்கு,

வணக்கம். தென்மொழி சு-25-ஓலை 2-இல் திரு. சுப்பு அவர்களின் கடிதம் மிக வருத்தத்தைத் தந்தது. அவர்,

"நீங்கள் நடத்திக் கொண்டிருக்கும், இப்போதைய பணி அறிவற்றது" எனக் கடுஞ்சொல் குறிப்பிட்டிருந்தது, அவர் கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவைப் பரப்பல் ஏற்றுக் கொள்ளத்தக்கதன்று எனவும் குறித்திருந்தார்: பாவலரேறு போன்ற தமிழ் அறிஞர்கள் பண்பாடு பற்றி எழுதிப் பரப்பிக் கொண்டிருக்கும் போதே திரு. சுப்பு அவர்கள் பண்பற்ற முறையில் அறிவிலி எனக் குறிப்பிடுகிறார். பண்பாட்டுப் பணியை யாவரும் செய்யாவிடில் திரு. சுப்பு போன்றவர் பண்பை அறிய முடியாமல் மாந்தர் பண்பாட்டு நிலையிலிருந்து விலகிவிடுவார்களே' என்ற கவலையில்தான் பாவலரேறு அவர்கள் மிகச் சிறந்த இப்பணியைச் செய்கிறார்கள். அல்லாக்கால் மாந்தர்கள் விலங்காண்டிகளாய்த்திரிவர் என்பதை அவர் விரைவில் உணர்ந்தாக வேண்டும். மேலும் பண்பாட்டைப் பரப்பி வந்த திரு. வி. க. மறைமலையடிகள், பாவாணர் ஆகியவர்களும் அறிவிலிகளா? சொற்களை அளந்து போட வேண்டும்.

தமிழர்களுக்குப் பண்பாடு முகாமையானது: அதனாலேயே வள்ளுவப் பேராசான் பண்புடைமை என்றொரு கூறு பாட்டை எழுதினார்: அதில் அவர் கூறுவதை திரு. சுப்பு அவர்கள் படித்துப் பார்க்க வேண்டும்:

பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

பண்புடைப் பெரியோர் தோன்றுவிடின் மாந்தர் மண்ணுக்குள் மாய்வர் என்பது திரு. சுப்பு அவர்களுக்குத் தெரியாது. ஏனெனில் அவர் மார்க்சு, இலெனின் ஆகியவர் கூற்றையும் ஆராய்ச்சி இல்லாமல் பார்ப்பவர் எனத் தெரிகிறது.

வள்ளுவப் பேராசான் சொல்லாப் பொதுவுடைமைகளை அவர்கள் கூறிலர். பண்பாட்டறிஞர்கள் தோன்றுவிடில் மாந்தர் அழிவர்: எனவே மாந்த இனத்தை அழிவிலிருந்து காக்கவே இப் பண்பாட்டியலைப் பாவலரேறு அவர்கள் செய்கிறார்கள்: அவரைப் போற்றத் தெரியாத திரு. சுப்பு தூற்றாமல் இருக்கவேண்டும்; திரு. சுப்பு அவர்கள் கூர்மையான அறிவுடையவராக இருக்கலாம். ஆனாலும்,

அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

பண்பு அறிவினும் முகாமை எனக் குறள் உணர்த்துகிறதே: எனவே பண்பு மூகாமையான தேவை என்பதை அவர் விரைவில் உணர்தல் நல்லது. இல்லையெனில் தமிழர்களுக்கு அவர்களைப் போன்றவர் ஆவர்: பயிரை வளர்க்க எண்ணுபவர்கள் களை வளர விரும்ப மாட்டார்கள் அல்லவா?

பண்பாட்டுப் பரப்பலுக்குக் கலை, இலக்கியம் ஆகியவை பரப்பல் கருவிகளே; மேலும் அவை மாந்தர்களின் அறநெறிகளைக் காக்கும் களஞ்சியம்; அதுவும் திரு. சுப்பு அவர்களுக்குத் தெரியக் காரணியமில்லை; பண்பு வகைகளைப் பற்றிப் படிக்க இயலா திரு. சுப்பு அவர்கள் பண்பைப் பற்றிச் சொல்லும் அறிஞர்களுடைய பேச்சையாவது கேட்க வேண்டும்; நல்லவற்றைக் கேட்க வாய்ப்பில்லாதபோதுதான் வயிற்றுக்கு அதுவும் சிறிது ஈயப்படும் என அறிவு புகட்டுகிறார் திருவள்ளுவர் என்பதை திரு. சுப்பு எண்ணி எண்ணிப் பார்க்கவேண்டும்.

பொதுவுடைமையைப் பெற்ற பின்புதான் கலை, இலக்கியம், பண்பாடு போன்றவற்றைப் பரப்ப வேண்டும் என்பது பிள்ளை பெற்றப் பின்னரே திருமணம் செய்து கொள்ளவேண்டும் எனக் கூறுவதற் கொப்பாகும்; பொதுவுடைமையைப் பரப்புவதற்கே கலையும், இலக்கியம் வேண்டும் என்பதை அறியாமல் எழுதி இருக்கிறார்; பொதுவுடைமையாளர்கள் மொழியே வேண்டாம் எனக் கூறுகிறார்களா? அவர்களுடைய சிந்தனை இந் நாட்டில் எதை விளைவித்துள்ளது என்பதை அவர் கூற முடியுமா? பொதுவுடைமை பேசுகிறவர்கள் தங்களிடமிருக்கும் மனைவி, மக்களைத் தவிர ஏனைய பொருட்களை அனைவருக்கும் பொதுவுடைமையாகப் பயன்படுத்துவார்களா? திரு. சுப்பு அவர்கள் உணர்தல்வேண்டும்; இனி வன்சொற்களை எந்த இடத்திலும் இடந்தெரியாமல் பயன் படுத்துவதை நிறுத்திக் கொள்ளல் நல்லது.

—அதியமான், தாழையூற்று.

O : 1398 (அலர்மேல் அப்பாத்துரையார்க்கு அருள்மணி விடுத்த மடல்படி!)

*அன்பின் அன்னையே!*

வணக்கம், நலம், ஒரு கேடா நமக்கு, இந்த நன்றி கெட்ட நாட்டில் பிறந்து விட்டபின்! உடல் நலக்குறைவினால் விடுப்பில் இல்லத்தில் இருந்த நான், இன்றுதான் 'தென்மொழி' 'சுவடி 25ஓலை 5-கண்டு-''பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் குடும்பத்திற்கு அருள் கனிந்து உதவுங்கள்''—என்ற ஆசிரியரின் உரையைக் கண்ணீர் உரையைப்—படித்துப் பதறிப் போனேன்; எங்கிருந்தேனும் உதவி' என்றோர் இன்குரல்-கேளாதா-''-நகை முகத்தைத் தவிர வேறு நகை நட்டறியாத தண்டமிழ்ப் பெண் செல்வி-''கலைஞர் இரங்காத நெஞ்சத்துடன் தாம் அக்குடும்பத்திற்குதவ விரும்பவில்லை'' என்று மறுத்தமை!'' ஐயோ தமிழே!

கோடிக்கணக்கான தமிழர்களில் ஒருசில நூறு பேர்களும் தமிழ்த் தாயின் பாலுண்டவர்கள் இல்லையோ? 'தமிழே அவர்' (கலைஞர்) என்பது பொய்; வடிகட்டிய பொய்' வரலாறு சொல்லவிருக்கும் பொய்; ''தமிழால்-அவர்'' மெய். முழுதும் மெய்; நல்லோர்கள் நவிலப் போகும் மெய்' அவரின் அறிவும், பதவியும் என் கால்தூசுக்குச் சமம்' இதோ ''விரைவில் நேரில் வருவேன்'' உரு. 3000/-க்குக் குறையாது அன்பளிப்பு அளிப்பேன். கவலற்க, என் போன்றோர் தங்களின் கண்ணீர் துடைக்க விழிப்பர்; விரைவர்; குழந்தைகளின் செவிகளில் சொல்லிவையுங்கள் 'தென்றல் வருகிறது' என்று; 'தேன் துளிகள் வருகின்றன' என்று; பிறநேரில்.

—அருள்மணி, வெங்காலூர்-21

(திருத்தம் : மடல் 1395-இன் மடலை எழுதியவர் பெ. குறிஞ்சி, மூர்த்திக்குப்பம், புதுவை.)

# தென்மொழி


## நினைக்கின்றேன்; நினைக்கின்றேன்;
## நெஞ்சு புண்ணுகின்றேன்!

உய்வடைந்து தமிழ்மொழியும்
தமிழினமும் நாடும்
உயரட்டும் உய்யட்டும்
என்றே என் உணர்வாய்ப்
பொய்வறியாப் பெருங்கருத்தாய்
புரையில்லாச் செயலாய்ப்
பொழுதெல்லாம் நாளெல்லாம்
மாதம்ஆண் டெல்லாம்
தொய்வறியா உடம்போடும்
உயிரோடும், மக்கள்
தொளைச்செவியில்
உள்நுழைத்துத்
துளிர்விடும்நாள் பார்த்தேன்!
செய்வறியா உணர்வினராய்ச்
செயலில்லா தவராய்ச்
சேர்ப்பதிலும் தின்பதிலும்
உயிர்தேய்கின் றுரே!

ஈங்கிவர்தாம் இப்படியென்
றுல், இந்த நாட்டில்
இருக்கின்ற தலைவரெல்லாம்
அறிவாளர் எல்லாம்
வீங்குகின்ற நெஞ்சினராய்ப்
பேச்சினராய், மக்கள்
விளங்காமல் போகட்டும்
வீழட்டும் என்றே
தூங்கவைத்துத் தொடையினிலே
கயிறுதிரிக் கின்றுர்!
தொன்தமிழர் நலிகின்றுர்;
மெலிகின்றுர்! அந்தோ!
நீங்கவைத்தித் துன்பத்தை—
நிலைக்கவைக்க இனத்தை—
நினைக்கின்றேன்;
நினைக்கின்றேன்;
நெஞ்சுபுண்ணு கின்றேன்!


சுவடி : 25
ஓலை : 7

ஆசிரியர்
பெருஞ்சித்திரனுர்

விலை:
உருபா: 2-00

# நமக்கு வந்த மடல்கள்.

○ : 1399: தகைமிகு ஐயா அவர்கட்கு: வணக்கம்; என்றும் உள்ள செந்தமிழ் போலத் தாங்கள் என்றும், எங்கும், சிறந்து வாழ, என்னின் நெஞ்சு நிறை இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துகள்; தங்கள் உண்மையுள்ள. —மா. பார்வதி; இளநிலை ஆராய்ச்சியாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-5.

○ : 1400: மாண்புயர் பாவலரேறு ஐயா அவர்களே! எம் இன வீறே! மொழியும் இனமும் நாடும் விடுதலை பெற ஓயாதுழைத்திடும் உண்மை உழைப்பே! தங்களின் இனிய பிறந்த நாளில் எம் நெஞ்சுநிறை வாழ்த்துகள். அன்புடன்.

—பெ. இராமலிங்கம்
இளநிலை ஆராய்ச்சிக் கல்வியர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை-5

○ : 1401: மதிப்புயர் ஐயா அவர்களுக்கு, ஐயா அவர்களின் பிறந்த நாளுக்கு என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள். அன்பன்

—ஆ. சண்முகம், ஆய்வு உதவியாளர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை-5.

○ : 1402: அன்புள்ள ஐயா, வணக்கம். தாங்கள் எல்லா நலங்களும் பெற்று நெடுநாள் வாழ அருள்புரியும்படி, தமிழ் அன்னையை வேண்டுகிறோம். தங்களுக்கு எங்களுடைய மனமுவந்த பிறந்தநாள் வாழ்த்துகள். வாழ்க பல்லாண்டு. நன்று வணக்கம், தங்களன்புள்ள. —பொற்செழியன் சேரலாதன்.
தாமரை கலை இலக்கிய மன்றம், பெங்களூர்-1.

(ஆசிரியர் குறிப்பு: தாங்கள் இருவரும் பேரன்புடன் விடுத்த வாழ்த்தளிப்புத் தொகை உருபா நானூறும் வரப்பெற்றேன்; நெஞ்சு நிறைந்த நன்றி.)

○ : 1403: பேரன்புடைய ஐயா அவர்களுக்கு நாரா-மகிழ்நன் மற்றும் குடும்பத்தினர் அனைவரும் வணங்கி வாழ்த்தி எழுதிக் கொண்டது.

தங்கள் பிறந்த நாளில், தாங்கள் பல்லாண்டு, பல்லாண்டு உடல் நலத்துடன், உற்ற உண்மைத் தொண்டர்களுடன், வாழவும், உங்கள் புகழ் வானளவு வளரவேண்டும் என்றும் எங்கள் வாழ்த்தினை வழங்கி, இறைவனையும் வேண்டி அமைகின்றோம்.
அன்புடன்; —நாரா-மகிழ்நன், நி. இரேணுகா, திருச்சி-14

○ : 1404: அன்பும் பண்பும் பாசமும் நிறைந்த அப்பாவிற்கு, மகன் எழுதுவது.

தங்கள் விருப்பப்படியே 'ஆசிரியர் பயிற்சி நிறுவனம்' திருவூரில் சேர்ந்தேன். பயின்று வருகிறேன். ஆனால் இந் நிறுவனம் நடுவண் அரசின் சார்புடையதால், பேராயக் கட்சிக்காரர்கள் நிரம்பியதால் இனவுணர்வும், மொழியுணர்வும் இழித்துரைக்கப்படுகின்றன. ஈழ விடுதலைப் போராட்டம் கொச்சைப் படுத்தப்படுகிறது. இருப்பினும் அனைவரையும் எழுச்சி பெறச் செய்து வருகிறேன்; ஒரு சிலரிடம் வெற்றியும் பெற்றுள்ளேன்; என் ஆசிரியர்கள் பார்ப்பனீயர்கள் என்பதால் எனக்கும் அவர்களிடம் கல்வி பயில விருப்பமில்லை. அண்மையில் நடை-

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)